226

# கமலை வாசகம்

ஐந்தாம் வகுப்பு

471
... THE REGISTRAR OF BOOKS ...
... 1958



TRB
031(3)
N57
89389

...ாந்தா பதிப்பகம்,
........ திருவாரூர், ஜங்.

RAZACK

226
1558

# கமல வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

(மலேயா பதிப்பு)

ஆசிரியர்
**வித்துவான் ரா. விசுவநாதன்** எம்.ஏ., பி.ஓ.எல்.,
(முன்பு) சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ்
தமிழ்ப் பேராசிரியர்
&
**பண்டிதர் செ. முத்துரத்ன முதலியார்,**
(முன்பு) திருவாரூர், அரசியல் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

பதிப்பாசிரியர்
**புலவர் பு. செல்வராசனார்**
தலைமைத் தமிழாசிரியர்,
C. A. H, இந்து முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, சென்னை-1.

V.P.H
R.T.N
VIJAYAPURAM ★ TIRUVARUR

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JAN 1958
MADRAS

**விவேகானந்தா பதிப்பகம்**
விஜயபுரம் :: திருவாரூர் ஜங்.
பதிப்புரிமை] 1957 [விலை 9 அணா.
ந. பை. 56

முதற் பதிப்பு 1951
ஆறும் பதிப்பு 1957

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்.
89.381
★ சென்னை-600 008. ★

Approved by the Director of Education.
Fedaration of Malaya

# முகவுரை

கமல வாசக வரிசையில் ஐந்தாவதாகிய இப் புத்தகம் அவ்வரிசையின் சிகரமாகும். உடல் வளர்ச்சியிலும் உள்ள வளர்ச்சியிலும் ஐந்தாவது வகுப்பு மாணவர்கள் ஒரு பருவ எல்லையைக் கடந்து அடுத்த பருவத்தை எட்ட வல்லவர் ஆகின்றனர். அந்நிலைக்கேற்ப அவர்களுக்கென எழுதப்பெறும் நூலும் அமைதல் வேண்டும்.

தாமாகவே எளிய இனிய தாய்மொழிப் பாடங்களை மௌனமாக - சிறிதளவேனும் உதடுகளை அசைக்காமல்-படிக்கவும், படிப்பதில் சுவை கொள்ளவும் கூடிய ஒரு நிலையை அவர்கள் இங்கு எய்து கின்றனர். ஆகவே இலக்கியச் செறிவும், உலக அறிவும் பொருந்திய பாடங்களை அவர்கள் படிக்கக்கூடியவர்களாகின்றனர். முன் நான்கு ஆண்டுகளுள் அவர்கள் எழுதத்தெரிந்து கொண்டுள்ள தாய் மொழிச் சொற்கள் ஏறக்குறைய 1900; பாடத்திட்டத்தின்படி அவர்கள் இவ்வாண்டு அறிய வேண்டியயவை 800. ஆகவே இப்பருவத்தில் அவர்கள் அறிந்திருக்க வேண்டிய தமிழ்ச் சொற்களின் தொகை 2700 ஆகும்.

இலக்கணத்தில் அடிப்படையான பெயர், வினை இவற்றின் தன்மைகள், பாகுபாடுகள், வாக்கிய அமைதிகள், சொல் ஆக்கங்கள், வழக்கச் சொற்கள் இவற்றிலும் மாணவர்கள் ஒரு நிலையை அடைந்தவர்களாக விளங்கவேண்டும். தாமாக அக உலகத்தையும் புற உலகத்தையும் காணவும் அப்படிக் கண்டவற்றைக் கட்டுரையாக எழுதவும், கடிதங்கள் எழுதவும், நிறுத்தல் குறிகள் முதலியவற்றைக் கற்றுக்கொள்ளவும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

இவையே பாடத்திட்டத்தின் குறிக்கோள். இதனைக் கருத்தில் கொண்டு இக்குறிக்கோள் நன்கு நிறைவேற வேண்டுமென்ற நோக்குடன் இப்புத்தகம் எழுதப்பெற்றுள்ளது.

இதனையும் இதன் முன்னுள்ள நான்கினையும் தமிழகம் நன்கு பயன்படுத்திக்கொள்ள இறைவனருள் உதவுவதாக.

பதிப்பகத்தார்

# உள்ளுறை

எண் பக்கம்

## உரைநடைப் பகுதி


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தஞ்சைப் பெரிய கோவில் | 1 |
| 2. | மணிமேகலை | 7 |
| 3. | மாயக்குழலோன் | 12 |
| 4. | நாடும் அரசியலும் | 18 |
| 5. | முருகன்-கணபதி விளையாட்டு | 24 |
| 6. | செஞ்சிக் கோட்டை | 27 |
| 7. | விதைகள் பரவும் விதம் | 34 |
| 8. | கலிங்கப் போர் | 39 |
| 9. | விறகு வெட்டி பாடியது | 43 |
| 10. | ஆறு | 49 |
| 11. | மாமல்லபுரம் | 51 |
| 12. | காட்டு விலங்குகள் | 59 |
| 13. | ஏழு பெரும் விந்தைகள் | 68 |
| 14. | இறவாதவர் எவர்? (ஒரு நாடகம்) | 77 |
| 15. | சந்திரன் | 86 |
| 16. | ஆடை | 89 |
| 17. | கடிதங்கள் | 96 |
| 18. | கடிதம் செய்யும் பயணம் | 99 |
| 19. | தமிழ் முழக்கம் (பாரதி) | 108 |
| 20. | செய்யுட் பகுதி | 109 |

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண் மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

# நாட்டு: வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# 1. தஞ்சைப் பெரிய கோவில்

ஒரு நாட்டின் சிறப்பை அந்நாட்டு மக்களின் கலையறிவைக் கொண்டு காணலாம். தமிழகம் பண்டைக்காலம் முதற்கொண்டு



தஞ்சைப் பெரிய கோவில்

இலக்கியம், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் முதலிய பல கலைகளில் ஓங்கி வளர்ந்து வந்திருக்கிறது. நாம் இந்த

உண்மையை நம் பழைய நூல்களிலிருந்தும் கட்டடங்களிலிருந்தும் அறிகிறோம்.

தமிழரின் சிற்பக்கலை அறிவின் சிகரமாக விளங்குவது தஞ்சைப் பெரிய கோவிலே ஆகும். அக்காலத்தில் நாடு இணையற்ற செல்வத்தில் திளைத்திருந்தது என்பதையும், மக்கள் கடவுள் பத்தியிலும் கலையறிவிலும் உயர்நிலையை எய்தி யிருந்தனர் என்பதை யும் காட்டச் சிறந்த அறிகுறியாக அக் கோவில் இன்று விளங்கி வருகிறது.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்னே சோழ மன்னர்கள் தமிழகத்தை ஆண்டு வந்தார்கள். அவர்களுள் இராச ராசன் என்பவனே மிகச் சிறந்தவன். அவன் தமிழகம் முழுவதையும் தன்னடிப்படுத்திய தோடு ஈழம், கடாரம் முதலிய வெளி நாடு களையும் வென்று தன் வெற்றிக் கொடியை நாட்டினான். தஞ்சையில் அவன் எழுப்பிய கோவிலே இன்று இராசராசேச்சுரம் என் றும், தஞ்சைப் பெரிய கோவில் என்றும் விளங்கி வருகிறது. அவன் தன் வெற்றி களுக்கு அறிகுறியாக அதனை எழுப்பினான். எல்லா வழிகளிலும் அது இணையற்ற பெருமையுடன் விளங்கவேண்டும் என்பது அவனது விருப்பம். அவ்விருப்பத்திற்கு

ஏற்றபடி அதன் நீளம், அகலம், உயரம் முதலியவற்றை அவன் அமைத்தான்.

தஞ்சை நகரம் இப்பொழுது ஒரு பெரிய புகை வண்டிச் சந்திப்பாக விளங்குகிறது. முப்புறங்களிலிருந்தும் அங்கே புகை வண்டிகள் வந்து சேருகின்றன. நாம் எப்பாகத்திலிருந்து புகை வண்டியில் சென்றாலும், தஞ்சையை அடைவதற்கு நெடுந் தொலைவிலிருந்தே கோவிலின் விமானத்தைக் காணலாம். அவ்விமானம் கோவில் உள்ள கடவுள் திருமேனிக்கு மேலே 216 அடி உயரமுள்ளதாகக் கட்டப்பட்டிருக்கிறது. அது சதுர வடிவாய், பதின்மூன்று கோபுர மாடிகளை உடையதாய் இருக்கிறது. அதன் உச்சியில் 25½ அடி நீளமும் 25½ அடி அகலமுமுள்ள ஒரு கருங்கல் வைக்கப்பட்டுள்ளது. அதன் மேலே பொன் தகட்டால் மூடப்பெற்ற ஒரு கலசம் அமைக்கப்பட்டு இருக்கிறது. இக் கருங்கல்லை விமானத்தின் மேல் ஏற்றத் தஞ்சைக்கு நான்கு கற்களுக்கு அப்பாலுள்ள சாரப்பள்ளம் என்னும் இடத்திலிருந்து சாரம் கட்டினார்கள் என்பர்.

தமிழர்களின் மன எழுச்சியின் உயர்வை எடுத்துக் காட்டுவதுபோல் அவ்விமானம் தோன்றுகிறது என்னலாம். விமானத்தின்

உயர்வுக்கு ஏற்றபடி அக்கோவிலின் பிற பகுதிகளும் அமைந்து இருக்கக் காண் கிறோம். அக்கோவிலைச் சூழ்ந்து ஓர் அகழி யும் இருக்கின்றது.

கோவிலுக்குள் புக இரண்டு பெரிய கோபுர வாயிலுள் நாம் நுழைய வேண்டும். இரண்டாம் கோபுர வாயிலைக் கடந்தவுடன் நாம் மிகப் பெரிய முற்றத்திற்கு வருவோம். அதன் நீளம் 800 அடி; அகலம் 400 அடி. அம்முற்றத்தில் பெரியதொரு மண்டபத்தில் மிகப் பெரிய நந்தி படுத்திருப்பதைக் காண லாம். அதன் உருவத்தை ஒத்த வேறு ஒரு நந்தி தமிழகத்தில் எங்கும் இல்லை என்பர்.

நந்தியின் எதிரில் இறைவன் எழுந் தருளியுள்ள விமானம் உள்ளது. அந்த விமானத்துக்கும் நந்திக்கும் இடையில் ஆறு பெரிய மண்டபங்கள் இருக்கின்றன. கட வுளைக் காண நாம் ஏழு வாயில்களைக் கடக்க வேண்டும். ஒவ்வொரு வாயிலிலும் 18 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள தெய்வக் காவலாளிகளின் உருவங்கள் வாயிலுக்கு இரண்டாக வைக்கப் பெற்றுள்ளன. இறை வன் திருமேனியும் மிகப் பெரியது.

இக்கோவிலின் சிற்ப வேலைகளைப் பற்றிப் பலர் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள்.

இக்கோவிலில் காணப்பெறும் ஓவியங்களின் அழகைப் பலர் வியந்து கூறியிருக்கிருர்கள்.

இத்தகைய கோவில்கள் நம் நாட்டில் அளவற்று விளங்குகின்றன. அவை முன்ஞேர் நமக்கு வைத்துச் சென்ற அருஞ் செல்வங்கள். நாம் அவற்றைப் பற்றி அறிவதால் நம் நாட்டின் பண்டைப் பெருமைகளை அறிந்தவர் ஆகிரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கலை | சிற்பம் | எய்தி | கோபுரம் | திருமேனி |
| தமிழகம் | ஓவியம் | சந்திப்பு | முற்றம் | காவலர் |
| இலக்கியம் | சிகரம் | விமானம் | மண்டபம் | தொலை |

பயிற்சி

I. விடை எழுது:—

1. சில நுண்கலைகளின் பெயர்களைக் கூறு.

2. நம் கோவில்கள் நமக்குத் தெரிவிக்கும் பண்டைப் பெருமைகள் யாவை?

3. இராசராசன் தஞ்சைக் கோவிலை எதற்கு அறிகுறியாகக் கட்டினுன் ?

4. கோவிலின் விமானத்தைப் பற்றி விளக்கு.

5. சாரப்பள்ளம் என்ற பெயர் ஏன் வந்தது ?

6. தஞ்சைக் கோவிலில் காணக்கூடியவை யாவை ?

II. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது—

கலையறிவு, பண்டைக்காலம், இணையற்ற, அறிகுறி, ஏறக்குறைய, அடிப்படுத்துதல், வெற்றிக்கொடி, மதிப்பதற்கரிய, மன எழுச்சி.

III: இலக்கணம்

1. பின் வரும் வாக்கியங்களை ஒன்றுபடுத்தி எழுது:

(1) சோழமன்னர்கள் தமிழகத்தை ஆண்டுவந்தனர்; அவர்கள் தஞ்சையிலிருந்து ஆண்டுவந்தனர்.

(2) விமானம் கடவுள் திருமேனிக்கு மேலே கட்டப்பட்டிருக்கிறது. அதன் உயரம் 216 அடி.

2, புள்ளிகள்:—முற்றுபுள்ளி, காற்புள்ளி இவற்றின் பயனைப்பற்றி முன் புத்தகத்தில் படித்தீர்கள். பின் வரும் வாக்கியத்தைப் பாருங்கள்:—

சோழன் கோவில் கட்டினான்; ஓவியங்களும் அதில் வரையச் செய்தான்.

இவை இரண்டு வாக்கியங்கள். இவற்றின் இடையே அரைப்புள்ளி இடப்பட்டிருக்கிறது. முதல் வாக்கியத்தில் எழுவாய் இருக்கிறது. அடுத்த வாக்கியத்தில் இல்லை. இவ்வாறு ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொள்ளுமானால், ஒவ்வொரு வாக்கிய முடிவிலும் அரைப்புள்ளி இடவேண்டும்.

IV. கட்டுரை

நீங்கள் பார்த்த ஏதேனுமொரு பெரிய கோவிலைப் பற்றிச் சில வாக்கியங்கள் வரைக.

# 2. மணிமேகலை

புகார் நகரத்தில் வாழ்ந்த கோவலன் என்ற வணிகனுக்கும் மாதவி என்ற நாடகக் கணிகைக்கும் பிறந்த பெண் மணிமேகலை. அவள் ஆடல், அழகு, கல்வி என்ற மூன்றிலும் மிகச் சிறந்து விளங்கினுள். ஆனுல் அவள் தந்தை திடீரென மதுரையிலே மாண்டுபோனதைக் கேட்டு அவளும் அவள் தாயும் ஆற்ற முடியாத துயரத்தில் ஆழ்ந்தனர். மாதவி துறவு பூண்டாள்.

இவ்வாறு இருந்தபோது, ஒருநாள் மணிமேகலை மலர்கொய்ய மலர்வனம் சென்ருள். மணிமேகலா தெய்வம் என்ற ஒன்று அங்கே தோன்றி அவளை மணிபல்லவத் தீவுக்குக் கொண்டு சென்றது. அத்தீவில் மணிமேகலைக்கு முன்பிறப்பு அறிவும் சில மந்திரங்களும் தெய்வ உதவியால் கிடைத்தன. அவள் வேறு வடிவம் கொள்ளவும் வான வழியே செல்லவும் அம்மந்திரங்கள் உதவின. இன்னும் அத்தீவில் சோற்றை எடுக்க எடுக்கக் குறையாத ஒரு பாத்திரமும் கிடைத்தது. அதன் பெயர் அமுதசுரபி.

அப்பாத்திரத்துடன் அவள் வான வழியாகத் திரும்பிப் புகார் நகரை அடைந்தனள். அவள் துறவிக் கோலத்துடன் பாத்திரமும் கையுமாக நின்றதைக் கண்டு ஊரார்

வியந்தனர். அவ்வூரிலே உலக அறவி என்ற ஓரிடம் உண்டு. அங்கே அங்கம் குறைந்தவர், பிணியாளர், வறியோர் ஆகிய பலர் இருந்தனர். மணிமேகலே அங்குச் சென்று அவர்களுக்குத் தன் பாத்திரத்திலிருந்து சோற்றை எடுத்து எடுத்துக் கொடுத்து அவ்விடத்தை அறச்சாலே ஆக்கினுள். நெடுநாட்களாகக் கொடிய வெயிலால் முற்றிலும் எரிந்து போன ஒரு காட்டில் திடீரெனப் பெருமாரி பெய்து அக்காட்டை வளமாக்கியது போல இருந்தது உலக அறவியில் மணிமேகலேயின் தோற்றம். அங்கிருந்த மக்கள் யாவரும் வயிறு ஆர உண்டு பசி தீர்ந்திருந்தார்கள். அக்காலத்தில் அறவண



அடிகள் என்ற ஒரு பௌத்தப் பெரியாரின் தொடர்பும் அவளுக்குக் கிடைத்தது. அவர் புத்தர் பெருமானின் நல்லுரைகளை யெல்லாம் அவளுக்குக் கற்பித்தார்.

இவ்வாறு மணிமேகலை சமயத்தொண்டு புரிந்து வாழ்ந்து வந்த காலத்தில் அந்நகரத்து அரசனின் மகன் உதயகுமரன் என்பவன், மணிமேகலைமீது காதல் கொண்டான். மணிமேகலை அக்காதலை விரும்பவில்லை.

ஒரு நாள் ஒரு தேவன் உதயகுமரனை வெட்டிக் கொல்ல, அரசன் தன் மகன் மரணத்துக்கு மணிமேகலையே காரணம் என்று எண்ணி அவளைச் சிறையில் இட்டான். அரசன் மனைவி மணிமேகலையைப் பல வழிகளிலும் துன்புறுத்த முயன்றாள். ஆனால் அவளால் ஒன்றும் இயலவில்லை. பிறகு அவள் மணிமேகலையின் தூய்மையையும் ஆற்றலையும் உணர்ந்தாள். தான் அவளுக்குச் செய்த துன்பத்திற்காக வருந்தி அவளைச் சிறையிலிருந்து உடனே விடுவித்து அவளிடம் மன்னிப்பு வேண்டினாள்.

மணிமேகலை அவளுக்கு நல்லறிவு புகட்டிப்பின் அவ்வூரை விட்டுப் பல இடங்களுக்கும் சென்று ஏழை மக்களுக்குச்

சோறு அளித்து உதவினாள். அறிவுடையோர்களைக் கண்டபோது அவர்களிடமிருந்து அறிவு பெற்றுத் தன் மதக் கொள்கையை நாட்டி வந்தாள். முடிவில் அவள் அறவண அடிகளை அடைந்து புத்த மதக் கொள்கையை ஐயம்திரிபு அற அறிந்து தவம்புரியலானாள்.

இக்கதையை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் புலவர் பெருமான் தமிழில் மிக அழகான காப்பியமாக எழுதியுள்ளார். அதன் பெயர் மணிமேகலை என்பதாகும். தமிழில் உள்ள பெருங்காப்பிய நூல்களுள் ஒன்றாக அது விளங்குகிறது. அதில் மணிமேகலையின் வரலாறு மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. நீங்கள் பெரியவர்களாகும்போது அச்சிறந்த இலக்கிய நூலைப் படித்துப் பயன் பெறவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| வணிகன் | மந்திரம் | சமயம் | கவிஞர் |
| கணிகை | துறவி | இணங்க | காப்பியம் |
| ஆடல் | கோலம் | தூய்மை | விரிவாக |
| மாண்டு | வியந்தனர் | ஆற்றல் | விடுத்தது |
| தீவு | ஆர | ஐயம்திரிபு | பௌத்த |

பயிற்சி

I. விடை எழுது

1. கோவலன் இறந்ததால் மாதவி செய்தது என்ன ?

2. மலர்வனத்தில் மணிமேகலைக்கு என்ன நிகழ்ந்தது ?

3. அமுதசுரபியின் இயல்பு யாது ?

4. உலக அறவியில் இருந்தோர் எத்தகையவர் ?

5. அவர்களுக்கு மணிமேகலை செய்த உதவி யாது ?

6. அறவண அடிகள் என்பவர் யார் ?

7. உதயகுமரன் எப்படி இறந்தான் ?

8. மணிமேகலை சிறையிலிருந்து எப்படி வெளியேறினுள் ?

9. மணிமேகலை என்னும் பெருங்காப்பிய நூலை எழுதியவர் யார் ?

II. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :—

ஆற்றமுடியாத, நல்லுரை, எடுக்க எடுக்க, நல்லறிவு, அறச்சாலை, மதக்கொள்கை, ஐயம்திரிபு அற, சோழநாடு, பசிதீர்ந்தது.

## III, இலக்கணம்

பின்வரும் நீண்ட வாக்கியத்தைச் சிறிய வாக்கியங்களாகப் பிரித்து எழுது :—

அங்கே மணிமேகலா தெய்வம் என்ற ஒன்று தோன்றி அவளை மணிபல்லவத் தீவிற்குக்கொண்டு சென்று அங்கே விடுத்தது.

## IV. கட்டுரை

மணிமேகலை மலர்வனம் புகுந்தது முதல் அமுதசுரபியுடன் திரும்பியது வரை நடந்தவை யாவை ?

# 3. மாயக் குழலோன்

ஜர்மனி நாட்டில் ஆமலன் என்ற நகர் ஒன்று இருக்கிறது. அதன் ஓரமாக வீஸர் என்ற ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. நெடுங் காலத்துக்கு முன்னே அந்நகரில் எலிகள் பெருகி நகர மக்களை அலைத்துக் கொண்டிருந்தன. அவை இல்லா இடமே இல்லை. அவற்றிற்குப் பகல் என்றும் இரவு என்றும் வேற்றுமை இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் அவை ஆயிரக் கணக்கில் இருந் தால் யாரால் என்ன செய்ய முடியும்? பூனை கள் எல்லாம் அவற்றைக் கண்டு அஞ்சி ஓடின.

மக்கள் அவற்றை வேட்டையாடப் பார்த்தனர். அவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவர்கள் ஒரு நாள் ஒன்று கூடி அத்தொல்லையை எவ்வாறு நீக்குவது என்று ஆராயத் தொடங்கினர்கள்.

அச்சமயம் அங்கே ஒரு புதியோன் புகுந்தான். அவன் விந்தையான உடை அணிந்திருந்தான். அவன் கைவிரல்கள் எப்போதும் புல்லாங்குழல் வாசிப்பனபோல அசைந்துகொண்டு இருந்தன. அவன் நெட்டையா யிருந்தான்; ஆனல் அவன்

உடல் மெலிந்திருந்தது. அவன் கண்கள் ஒளி வீசின.

அவன் அவையோர்களை வணங்கி, "ஐயன்மீர், நான் ஒரு மாயக் குழலோன். என் குழலின் வாசிப்பைக் கொண்டு உலகிலுள்ள எந்த உயிர்ப்பிராணியையும் என் வசப்படுத்திவிடுவேன். சென்ற ஆண்டு அரேபியா நாட்டுக்குச் சென்று அங்குள்ள பாம்புகளை யெல்லாம் ஒழித்தேன்; இரண்டு



நாட்களுக்கு முன் ஆப்பிரிக்கா போய் அங்குள்ள வௌவால்களை யெல்லாம் வெருட்டினேன். எனக்கு ரூபாய் ஆயிரம் கொடுப்பீர்களானல் இக்கணமே இந்நகரில் உள்ள

எலிகள் யாவற்றையும் இல்லாமற் செய்து விடுவேன்'' என்ருன்.

அச்சொற்களைக் கேட்ட அனைவரும் 'ஆயிரம் என்ன? ஐயாயிரம் தருகிருேம்; எப்படியாவது இவ்வெலிகளைத் தொலைத்து விடு!' என்ருர்கள்.

உடனே அக்குழலோன் தெருவில் வந்து தன் மார்பில் தொங்கிக்கொண்டிருந்த குழலை எடுத்து வாசிக்கத் தொடங்கினுன். அவ்வொலி எழுந்தவுடன் ஒவ்வொரு வீட்டிலிருந்தும், கடையிலிருந்தும், களஞ்சியத்திலிருந்தும், பண்ட சாலையிலிருந்தும் எலிகள் குதித்துக்கொண்டு வெளியே வந்தன. அப்பப்பா எத்தனை எலிகள்! அவற்றில் எத்தனை விதங்கள்! வெள்ளை எலி, கருப்பு எலி, சாம்பல் நிற எலி, மீசைக்கார எலி, தாடிக்கார எலி, பருத்த எலி, இளைத்த எலி, அத்தான் எலி, அம்மான்சேய் எலி, தாய் எலி, தகப்பன் எலி, குழந்தை எலி, பாட்டன் எலி, பாட்டி எலி, பெயரன் எலி, பெயர்த்தி எலி, முதலிய எல்லாம் வாலைத் தூக்கிக்கொண்டும், குதித்துக்கொண்டும் குழலோன் பின்னே சென்றன.

அவன் வீதி வீதியாய்ச் சென்ருன். அந்நகர எலிகள்யாவும் தெருக்களில் நிற்க இடம்

இல்லாமல் ஒரு கல் தொலே நீள ஊர்வல மாகச் சென்றன. அவன் அவற்றை எல் லாம் அழைத்துக்கொண்டு ஓர் ஆற்றைக் கடந்து சென்ருன். அவனைப் பின் தொடர்ந்து சென்ற அவை யாவும் தண்ணீ ரில் குதித்து விட்டன. ஆறு அவற்றை அடித்துச் சென்றது.

இதனுல் மக்களுக்கு உண்டான மகிழ்ச் சிக்கு அளவே இல்லே. அவர்கள் எல்லாரும் எலி வளேகள் யாவற்றையும் தூர்த்தனர்; தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வீடு தோறும் தோரணம் கட்டினர். ஆனுல் ஒரு வரும் குழலோனேக் கவனிக்கவில்லே.

அவன் எலிகளேயெல்லாம் கொன்று விட்டு நகருக்குள் வந்தான். அவனுக்கு ஒருவரேனும் நன்றி சொல்லக்கூட வர வில்லே. அவன் நகரத் தலேவரிடம் நேரில் சென்று, “என் கூலி ஆயிரம் ரூபாயையும் என்னிடம் கொடுங்கள்” என்று கேட்டான். அதற்கு அவர், “ஆயிரம் ரூபாயா?” எலி களேக் கொல்ல ஆயிரம் ரூபாயா? வேண்டு மானுல் ஐந்து ரூபாய் கொடுப்போம். வாங் கிக் கொண்டுபோம்” என்ருர்.

குழலோன், “ஐயா, என்னுடன் விளே யாட வேண்டா. எனக்கு உம்முடன் பேச

நேரமில்லை; பேசினபடி ஆயிரம் ரூபாயைக் கீழே வையுங்கள்'' என்ருன்.

அதற்கு நகரத் தலைவர், ''எலிகள் எல்லாம் இறந்துவிட்டன. இனி உம்மால் என்ன செய்ய முடியும்? நான் பணம் கொடுக்க மாட்டேன்'' என்ருர்.

குழலோன் வாய் திறக்கவில்லை; வீதியில் வந்தான்; தன் குழலை எடுத்து ஊதிஞன். ஊரிலுள்ள குழந்தைகள் எல்லாம் அவன் பின்னே புறப்பட்டன. ஊரார், என்ன கெஞ்சியும் அக்குழந்தைகள் கேட்கவில்லை. குழலோன் அக்குழந்தைகளுடன் தன் நாட்டுக்குப் போய்விட்டான்.

நகரத்தார் யாவரும் தாம் செய்த குற்றத்தை எண்ணி வருந்திஞர்கள். வருந்தி யாது பயன்?

| | | | |
|---|---|---|---|
| அலைத்து | மாயம் | களஞ்சியம் | நன்றி |
| வேட்டை | இளைத்த | வசப்படுத்தி | நெட்டை |
| இயல | ஒழி | அம்மான்சேய் | மகிழ்ச்சி |
| தொல்லை | வெருட்டி | பெயரன் | தூர்த்தனர் |
| ஆராய | அனைவரும் | பெயர்த்தி | தோரணம் |

பயிற்சி

I. விடை எழுது:

1. குழலோன் உடையும் தோற்றமும் எவ்வாறு இருந்தன?

2. அவன் வெவ்வேறு இடங்களில் செய்த பெருஞ்செயல்கள் யாவை ?

3. எலிகளின் வகைகளை யெல்லாம் கூறு.

4. எலிகளெல்லாம் எவ்வாறு அழிந்தன ?

5. எலிகள் ஒழிந்தபின் ஊரார் என்ன செய்தனர்.

6. குழலோனுக்குக் கோபம் வந்ததேன் ?

அவன் குழந்தைகளை யாது செய்தான் ?

II. இரு பொருள் கூறு:—

எண், கூடு, ஆண்டு, களம், திங்கள், ஊது, நாடு,

III. இப்பாடத்தில் பின்வரும் தலைப்புகளை உரிய இடங்களில் இட்டுக் காட்டு:—

(1) எலித் தொல்லை. (2) குழலோன் உதவி. (3) எலிகள் நாசம். (4) குழலோன் வஞ்சிக்கப்படல். (5) பழிக்குப் பழி.

## IV. இலக்கணம்

ஆடு, பாடு, உணர், தோன்று-இவ்வினையடிகளிலிருந்து பெயர்ச் சொற்கள் உண்டாக்கு.

## V. கட்டுரை

குழலோன் பாம்புகளை தொலைத்தான் என்று கதையை மாற்றிக்கொண்டு, பாம்புகள் புறப்பட்ட தோற்றத்தை விளக்கு

# 4. நாடும் அரசியலும்

'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பது ஒரு பழமொழி. அத்தகைய பெருமை வாய்ந்த கம்பர் தமிழில் ஓர் இராமாயணம் பாடினார். அது உலகப் பெரு நூல்களுள் ஒன்றாக இன்று விளங்கி வருகிறது.

கம்பராமாயணத் துவக்கத்தில் கம்பர் தம் கதைத் தலைவனான இராமன் தோன்றிய கோசலை நாட்டின் வளத்தையும், அதன் தலைநகரான அயோத்தியின் பெருமையையும், அங்கே ஆண்டு வந்த தயரதனின் அரசியல் சிறப்பையும் 145 செய்யுட்களில் பாடியுள்ளார். கம்பர் காவிரி நாட்டிற் பிறந்து வளர்ந்தவர். தமிழகத்தில் இணையிலாப் பற்றுக் கொண்டவர். அவர் தம்முடைய நாட்டின் வளத்தையும் அதன்மீது தாம் கொண்ட பற்றையுமே தம் நூலில் அமைத்துள்ளார். சிறந்த நாடு என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், அதன் அரசியல் எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் கம்பர், தம் மனக் கண்ணால் ஆராய்ந்து அவற்றையே தம் நூலில் வரைந்துள்ளார் என்றும் சிலர் கூறுவர். உண்மை எதுவானாலும், அவருடைய கருத்

துக்களை நாம் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது.

நாட்டின் சிறப்பு அதன் மக்களால் அமைகிறது. கம்பருடைய நாட்டில் கள்வரே இல்லை; ஆதலால் அங்குக் காவலுக்குத் தேவையே இல்லை. அந்நாட்டில் வறியோரே இல்லாமையால் அங்கே கொடைக்கும் வழியில்லை. எல்லாரும் படித்திருந்தனர்; ஆகவே கல்லாதவர் என்றோ முற்றிலும் கற்றவர் என்றோ எவரையும் குறித்துச் சொல்ல இயலவில்லை. எல்லாரிடமும் செல்வம் நிறைந்திருந்தது. ஆகவே, அங்கு இல்லாரும் இல்லை. உடையவரும் இல்லை. இவ்விதம் நாடு கல்வி, செல்வம் இவற்றில் நிரம்பியிருந்தது. மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தனர். அவர்களுடைய மனம் நல்வழிகளிலேயே சென்றது. அவர்கள் வாழ்வின் நன்மைகள் யாவற்றையும் இனிதே நுகர்ந்து வந்தனர்.

இனி நாட்டின் வளங்களைக்காண்போம்: சரயு நதி தன் ஆயிரங் கிளைகளோடு நாடெல்லாம் பாய்ந்து வந்தது. தண்ணீர்ப் பஞ்சம் எங்குமே இல்லை. நிலவளமும் மக்கள் உழைப்பும் செழித்து ஓங்கி வந்தன. ஆண்களும் பெண்களும் ஓயாமல் உழைத்து வந்

தனர். இவற்றின் விளைவாக நாட்டின் விளை பொருள்கள் மல்கின.

சோலைகளில் மயில்கள் ஆடின; தாமரைகள் விளக்குகள் எரிவன போலவிளங்கின; வானம் மத்தளம் கொட்டுகிறது எனும்படி குமுறி மாதம் மும்மாரி பொழிந்தது. குவளைப் பூக்கள் நீர் நிலைகளிலே நின்று பெண்களின் கண்களோஎன்னும்படி மலர்ந்தன. கடலின் அலைகள் ஒரு புறத்தில் எழுந்து மடங்கும் தோற்றம் நாடக மேடையில் ஏறி இறங்கும் திரைகள் போல விளங்கின. மரங்களிலும் செடிகளிலும் கொடிகளிலும் பூக்களை நுகர்ந்து திரியும் வண்டினங்கள் யாழ்போல் பாடின.

வயல்களில் உழவர்கள் நெற்கதிர்களைப் போர் போராகக் குவித்தனர். இடையர் மாட்டு வளம் பெருகப் பாலும் தயிரும் விற்றுப் பெரும் செல்வம் படைத்தனர். நுளையரும் நுளைச்சியரும் மீன் பிடித்தும், முத்துக் குளித்தும், உப்புக் காய்ச்சியும் உலகுக்கு அளித்து வந்தனர்.

வீடுதோறும் பெண்டிர் தம் கூந்தல் உலர ஊட்டும் அகில் புகையும், ஆலைகளில் வெல்லம் காய்ச்சுவதால் எழும் புகையும்,

மறையோர் வேள்விகளில் எழும் புகையும் மேகங்கள் போல வானத்தில் படிந்தன.

கப்பல்களிலும் வண்டிகளிலும் சரக்குக் கள் வந்து போய்க்கொண்டு இருந்தன. மக் கள் செல்வக் களிப்பால் பலவகை மகிழ்ச்சி களில் இறங்கினர். ஆடல்களும் பாடல் களும் எங்கும் மலிந்தன.

இத்தகைய நாட்டைத் தயரதன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவன் நிரம்பக் கற்றிருந்தான் ; கற்றவழி நடந்தான். அவன் மக்களிடம் தாய் போன்ற அன்பு கொண் டிருந்தான் ; மக்களுக்கு வேண்டிய நன்மை களையெல்லாம்ஆராய்ந்து செய்வதில் அவன் முனைந்திருந்தான். அவர்களுக்கு உண்டா கும் தீமைகளை முன்னரே உணர்ந்து அவை நிகழாமல் தடுத்து வந்தான்.

அவனுடைய வீரத்துக்கு எல்லையில்லை. அவனுடைய அமைச்சர்கள் அவனுக்குக் கண்கள் போலிருந்து உதவி வந்தனர்.

அத்தகைய நாட்டிலே அத்தகைய மன் னனுக்கு இராமன் புதல்வனாகத் தோன்றி னான். அவனுடைய வரலாற்றைக் கூறுவதே இராமாயணம் எனும் காவியம்.

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | அரசியல் | கொடை | நுளையர் |
| முகப்பு | வரை | நுகர்ந்து | குமுறு |
| வளம் | பகுதி | நுளைச்சியர் | கூந்தல் |
| பற்று | வறியோர் | யாழ் | உலர |
| கல்வி | இணையிலா | மனக்கண் | திரை |
| முனைந்தான் | கேள்வி | செழித்தோங்கி | நல்வழி |

## பயிற்சி

I. விடை எழுது:

1. கம்பரைப் பற்றி வழங்கும் பழமொழி யாது?

2. கம்பராமாயணம் இன்று எப்படி விளங்குகிறது?

3. கோசல நாட்டு வருணனையை, அந்நாட்டைப் பார்த்திராத கம்பர் எப்படிப் பாடினார்?

4. கம்பர் தம் நூலில் காட்டிய நாடு எத்தகைய சிறப்பு உடையது?

5. கம்பரின் கோசலத்தில் என்னென்ன இல்லையாம்?

6. கோசலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்?

7. அந்நாட்டு வளத்திற்குக் காரணம் என்ன?

8. நாட்டு வளம் இயற்கை அழகு கொண்டு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

9. இடையரும் உழவரும் மீன் பிடிப்போரும் என்ன செய்தனர்?

10. வானத்தில் புகை மேகம்போல் பரவக் காரணம் யாது?

11. தயரதன் குணங்கள் யாவை ?

II. 'கல்வியிற் பெரியவர் கம்பர்' —இப்பழமொழி போல் கம்பரைப்பற்றி நீ கேள்விப் பட்டுள்ள பழமொழி ஒன்று எழுது.

III. நாட்டுவளம், நாட்டுப்பற்று, நுகர்ந்து, செழித்தோங்கி, வினைபொருள்கள், மலிந்தன—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

IV. எதிர்ப்பதங்கள் எழுது.

பெரியவர், துவக்கம், பெருமை, இல்லார், மகிழ்ச்சி, நன்மை, வீரன்.

V. இலக்கணம்

பின் வரும் வாக்கியங்களைப் பன்மையில் அமைக்க:—

1. அவன் படித்திருந்தான்.
2. வண்டியில் சரக்கு வந்தது.
3. நான் நூல் படிக்கிறேன்.

VI. கட்டுரை

1. சோழநாட்டின் வயல்வள இயற்கைக் காட்சியை எழுது.

2. கோசல நாட்டு மக்களின் வாழ்வுச் சிறப்பை வர்ணித்து எழுது.

## 5. முருகன் கணபதி விளையாட்டு

சிவப்பிரகாசர் என்னும் புலவர் பெருமான் தம் உடன்பிறந்தார் திருமணக் காலத்திலே சில பாடல்களைப் பாடினர். அவற்றில் ஒன்று கீழே வருவது. இப்பாடலில் மூத்த பிள்ளையாரும் முருகனும் குறும்பு விளையாடல்கள் புரிவதைப் புலவர் கற்பனை செய்துள்ளார்.

அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதான்
 ‘ஐய! என் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன்’ என்றே சிணுங்கிடவும்,
 அத்தன் வேலவனை நோக்கி

விரைவுடன் வினவவே, ‘அண்ணன்என் சென்னியில்
 விளங்குகண் எண்ணினன்’ என,
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து, ‘நீ அங்ஙனம்
 விகடம் ஏன் செய்தாய்?’ என

‘மருவும் என் கைந்நீளமுழம் அளந் தான்’ என்ன,
 மயிலவன் நகைத்து நிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி, “நின்
 மைந்தரைப் பாராய்” எனக்

கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
 கருப்பெரு தீன்ற கன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டவள்
 களிப்புடன் உமைக்காக்கவே.

## குறிப்புரை

அரனவன் இடத்திலே-சிவபெருமானிடத்திலே-ஐங்கரன்-ஐந்து கைகளையுடைய விநாயகன். அறு முகன்-முருகன். சிணுங்கிடவும்-முகத்தைச் சுளிக்கவும். அத்தன்-சிவபிரான். வேலவனை-முருகனை. சென்னி-தலை. விகடம்-வேடிக்கை. மருவும்-பொருந்திய. மயிலவன் - முருகன். மலை அரையன் உதவ வரும் உமை-மலை அரசன் பெற்ற உமா தேவி. கருத அரிய கடல் ஆடை உலகு பல அண்டம் கருபெருது ஈன்ற கன்னி-நினைக்க முடியாத பெரிய கடலை ஆடையாகக் கொண்ட நிலவுலகையும் பல அண்டங்களையும் கருவிலே கொள்ளாமல் பெற்ற பெண்ணான அம்பிகை. உமைக் காக்கவே-மணமக்களாகிய உங்களைக் காப்பாற்றவே.

## பயிற்சி

I. விடை எழுது:

1. அரசனிடத்தில் ஐங்கரன் என்ன கூறிச் சிணுங்கினான் ?

2. வேலவன் அரன் கேட்ட கேள்விக்கு என்ன விடை கூறி வெம்பினான் ?

3. ஐங்கரன் அறுமுகனிடம் விகடம் செய்யக் காரணம் என்ன ?

4. முதலில் குறும்பு செய்தது யார் ?

5. உமையவளை நோக்கி அரன் என்ன கூறினான்?

6. உமையவள் எத்தகையவள் ?

II. இந்தச் செய்யுளை உரைநடையாக எழுது.

III. சென்னி, செவி, வினவு, மைந்தர்—இவற்றிற் குரிய வேறு பெயர்களை எழுது.

IV. இலக்கணம்

1. கரம், செவி, சென்னி, கண், கை — அறு வகைப் பெயர்ச் சொற்களுள் இவை என்ன பெயர் கள் ?

2. கிள்ளினுன், எண்ணினன், மைந்தர், கன்னி, உமை, செய்தாய், பாரீர் — ஒருமை, பன்மைகளை எடுத்து எழுது.

3. பின்வரும் சொற்களை சேர்த்து எழுது :—

அந்த+கிளி. இந்த+சட்டி. எந்த+புத்தகம். அவனை+பார். பாக்கை+கடி. புத்தகத்தை+ படி.

V. கட்டுரை

இச்செய்யுளை ஒரு சிறு நாடகமாக எழுது.

# 6. செஞ்சிக்கோட்டை



தேசிங்கு மன்னனைப் பற்றிக் கேள்விப் படாத தமிழரே இரார். அவன் அஞ்சா நெஞ்சு படைத்தவன்; வீரர்களுள் வீரன். தான் ஒருவனுகவே நின்று பகைவர் பலரைக் கொன்று குவிக்கும் ஆற்றல் வாய்ந்தவன். இளம் வயதிலேயே அவன் டில்லி மன்ன னிடம் இருந்த முரட்டுக் குதிரை ஒன்றை அடக்கினுன். அவனுடன் போருக்கு வந்த டில்லி மன்னனின் படைகளை அவன் சின்ன பின்ன மாக்கினுன். அவன் குடிகளிடத்தில் மிகுந்த அன்புடையவனுக இருந்தான்.

அவன் அரசாண்ட ஊர் செஞ்சி என்பது. அங்குள்ள மலைகளின்மீது கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அவன் வாழ்ந்து வந்தான். முன் காலத்தில் மலையரண், காட்டரண், நிலவரண், நீரரண் என்ற நால் வகை அரண்களுக்கிடையே கோட்டைகளைக் கட்டிக்கொண்டு மன்னர்கள் வாழ்ந்து வந்தார்கள். செஞ்சியும் இவ்வகை அரண்களை இயற்கையிலேயே பெற்றிருந்தது.

செஞ்சி நகரின் எழிலைப்பற்றித் தேசிங்கு ராஜன் கதை என்ற நூல் பின் வருமாறு அழகாகப் பகருகின்றது :—

“ செஞ்சி நகர்ச் சீரில்
சிலவற்றை எடுத்துரைப்போம் :
எஞ்சலிலா வீதிகளும்,
எழில் தோரண நிரையும்,

வாழை, கமுகுகளும்
வளமாகக் கட்டியதும்,
ஏழைகளைக் கூவி
அன்னமிட்டு வருவதும்,

இந்திரலோகம் போல்
இருக்கும் அரண்மனைகளும்,
கந்த மின்னார்களின் நல்
கற்பின் திறமைகளும்,

வேதியர்கள் கூடி
வேதங்கள் படிப்பதுவும்,
நீதி தவருமல்
நிகழ்புலவர் பாடுவதும்,

பொன்னகரின் தன்மைபோல்
பொருந்தி நின்ருடுவதும்,
மன்னர்சீர்க் கீர்த்திதனை
வாழ்த்தி வருகிறதும் ''

இவ்வாறு செழுமை வாய்ந்து விளங்கிய செஞ்சி இன்று மிக எளிய நிலையில் இருக்கின்றது. என்ருலும், பழைய பெருமைகளின் குறிகள் இன்னும் அங்கு இல்லாமற் போகவில்லை. அவற்றைப் பார்ப்பதற்காக மக்கள் அங்கு போய் வருகின்றனர்.

விழுப்புரத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே திண்டிவனம் என்ற ஓர் இருப்புப் பாதை வண்டி நிலையம் உண்டு. அங்கிருந்து பதினேழு கல் தொலை சென்ருல் செஞ்சியை அடையலாம். செஞ்சி இப்பொழுது ஒரு தாலூக்காவின் தலைமை ஊராக இருக்கிறது. தாலூக்கா அதிகாரிகளின் அலுவல் அகங்கள் அங்கே உண்டு. அங்கே தங்கி நாம் மலைமேலுள்ள கோட்டைகளைக் காணச் செல்லலாம்.

இராசகிரி என்பது மிகப் பெரிய கோட்டை. அதைச் சூழ்ந்துதான் தேசிங்கின் காலத்தில் படைவீரர்கள் தங்கிய இடங்கள் இருந்தன. அம்மலைமீது ஏறும் வழியில் ஆறு மாடியுள்ள ஒரு கட்டடத்தை நாம் காணலாம். அதன் அருகே அரசனுடைய குதிரைக் கொட்டில் இருந்ததாம்.



அவ்விடம் இப்பொழுது பாழாய்க் கிடக்கிறது. அங்கே ஓர் அழகிய குளமுண்டு. அதைச் சூழ்ந்து ஒரு மண்டபம் இருக்கிறது. அம்மண்டபம் நிலமட்ட அளவே உயரமுள்ளதாக இருக்கிறது. அதன்கீழே செல்லும்

வழியாக நாம் சென்று குளத்தை அடைய லாம்.

அடுத்தாற்போல, அரசன் தானியங் களைச் சேர்த்து வைப்பதற்காகக் கட்டிய பெரிய களஞ்சியங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு அடுத்து அரசன் உடற்பயிற்சி செய்யும் இடம் இருக்கிறது.

மலையின்மீது ஏறும்போது வழியில் நாம் பல மண்டபங்களைக் கடந்து செல்ல வேண் டும். போகும் வழியில் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கு இவை பயன்படும். மலையின் உச்சியில் அரங்கநாதர் கோவில், மணிக் கூண்டு, அரசன் கொலு மண்டபம், கரு வூலம் முதலானவை இருக்கின்றன. அரசன் வாழ்ந்த காலத்தில் இவை மிகச் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும்.

இன்னும் இங்கே இரண்டு மலைகள் உண்டு. ஒன்று கிருஷ்ணகிரி; மற்றது அரங்ககிரி. கிருஷ்ணகிரி மிகவும் செங்குத் தானது. இதன் உச்சியில் சில கோவில் களும், களஞ்சியங்களும், மண்டபங்களும் உண்டு. அரங்ககிரியில் அரங்கநாதர் கோவில் இருக்கிறது. பள்ளிகொண்டிருக் கும் அப்பெருமான் முகத்தைத் திருப்பிக் கொண்ட நிலையில் அங்குக் காட்சியளிக்

கின்றுர். தேசிங்கு டில்லி மன்னனுடன் போர் புரியுமுன் அக்கடவுள் முன்சென்று விடை வேண்டினனும். அவர் 'இன்று வேண்டாம்; நாளை போகலாம்' என்று குறிப்பித்தனராம். அச்சொல்லை வீரன் கேளாமல் அன்றே போருக்குப் புறப்பட விடைகேட்ட போது அவர் மனங்கசந்து முகத்தைத் திருப்பிக் கொண்டாராம். இவ்வாறு அங்குள்ளவர்கள் கதை கூறுகிருர்கள்.

இவ்வாறு நம் பண்டை வரலாறுகளைக் காட்டும் சான்றுகள் நாடெங்கும் மலிந்து கிடக்கின்றன. முடிந்த வரையில் நாம் அவற்றைக் காண்பது நலமாகும்.

| | | | |
|---|---|---|---|
| அரண் | எஞ்சல் | கந்தம் | வேதியர் |
| கிரி | இயற்கை | மண்டபம் | மின்னுர் |
| களஞ்சியம் | எழில் | நிறை | கற்பு |
| கீர்த்தி | பாழ் | மலிந்து | நிலையம் |
| படைவீரர் | வேதம் | தானியம் | கருவூலம் |

பயிற்சி

I. விடை எழுது:

1. தேசிங்கு மன்னனின் இளமையைப்பற்றி நீ அறிவன யாவை?

2. செஞ்சி நகர் மக்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தனர்?

3. நால்வகை அரண்கள் யாவை?

4. இராசகிரிக் கோட்டையில் நீ காணக்கூடியவை யாவை?

5. அரங்கநாதர் முகத்தைத் திருப்பிக்கொண்டது ஏன்?

II. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:—

அஞ்சாநெஞ்சு, பொன்னகர், உடற்பயிற்சி, சின்னபின்னம், மணிக்கூண்டு.

III. இலக்கணம்

1. செயப்படுபொருளைப் பின்வருமாறு எழுவாயாக மாற்றலாம்:

தேசிங்கு குதிரையை அடக்கினான்.

குதிரை தேசிங்கால் அடக்கப்பட்டது.

2. மேலே காட்டியபடி பின்வரும் வாக்கியங்களை மாற்றி அமை:

(1) தேசிங்கு, டில்லி மன்னரின் படைகளைச் சின்னபின்ன மாக்கினான்.

(2) உலகத்தார் செஞ்சியின் கீர்த்தியை வாழ்த்துகிறார்கள்.

(3) அங்கே நாம் பல கட்டடங்களைக் காணலாம்.

IV. கட்டுரை

உன் ஊரிலிருந்து செஞ்சிக்குப் போகும் வழி யாது? வழியில் என்னென்ன பார்க்கலாம்?—விளக்கி எழுது.

---

# 7. விதைகள் பரவும் விதம்

மனிதருக்கு இருக்கும் உணர்ச்சிகளைப் போலவே தாவரங்களுக்கும் உண்டு. மனிதர்கள் தம் குழந்தைகளைப் பாதுகாக்க எவ்வளவு கவலை கொள்கிருர்களோ அவ்வளவு கவலையைச் செடி கொடிகளும் மரங்களும் தம் குழந்தைகளைக் காக்கக் கொள்கின்றன.

செடிக்கு அதன் விதையே குழந்தை. அது வளர்ந்து தன் முறையில் புதிய விதைகளை உண்டாக்குகிறது. இவ்வாறு செடி தன் இனத்தை வளர்க்கிறது. விதையின் பாதுகாப்புக்குத் தோலும் ஓடும் உள்ளன. அவற்றினுள் விதை உயிருடன் நீண்ட நாள் பிழைத்திருக்கும்; பிறகு அது நிலம், நீர், காற்று முதலிய உதவிகள் கிடைத்தவுடன் செடியாக முளைத்து வளரும்.

நெற்றுக்களிலும் நன்ருகப் பழுத்த பழங்களிலும் உள்ள விதைகளே நன்ருக விளைந்த விதைகள். அவரை, வெண்டை முதலியவற்றின் நெற்றுக்களில் விதைகள் மட்டுமே இருக்கும்; அவற்றை ஆட்டினுல் சலசல வென்று ஒலிப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மா, கொய்யா, பலா, நாரத்தை முதலிய பழங்களில் சாறும் சதையும் விதைகளைச் சூழ்ந்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

மனிதர்களும் விலங்குகளும் பறவைகளும் பழங்களைத் தின்கின்றன. அவ்வாறு பழவிதைகள் பல விடங்களிற் போய்ச் சேருகின்றன. பறவைகள் எச்சமிடும் இடங்களில் செடிகள் வளர்வதற்கு இதுதான் காரணம். இவ்வாறு பழங்களை யாரும் விரும்புவதற்காகவே அதற்குச் சாறும் சதையும் அமைந்து இருக்கின்றன.

சாறு இல்லாத காய்கள் முற்றின பிறகு வெடிக்கும். அப்பொழுது விதைகள் சிதறும். அப்படிச் சிதறுவதால் விதைகள் செடியின் அடியிலேயே விழாமல் அகன்றுபோம். அப்படிச் செய்வதால் குழந்தைச் செடிகள் ஒரே இடத்தில் பிறந்து, வளர இடமில்லாமல் தவிக்க மாட்டா.



சில சமயங்களில் பஞ்சு போன்ற பொருள்கள் பிள்ளைகள் எட்டிப் பிடிக்கும் உயரத்தில்

பறப்பதை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா? அவற்றைப் பிடித்துப் பார்த்தால் அவை ஒவ்வொன்றின் அடியிலும் ஒவ்வொரு விதை இருப்பதைக் காண்பீர்கள். எருக்கஞ் செடி விதைகள் இவ்வாறு பறக்கும்.

புற்கள் உயரமாக வளர்ந்திருக்கும் இடங்களின் வழியாக நடந்து சென்ருல் நம் உடைகளில் முள்போன்ற பொருள்கள் ஒட்டிக்கொள்வதைப் பார்த்திருக்கிறீர்களா? இவை அங்கு மேயும் ஆடு மாடுகளின் உடல்களில் ஒட்டிக்கொள்ளும். இவை களும் விதைப் பொதிகளே. இவ்வாறு புற் பூண்டுகள் விலங்குகளையும் மனிதர்களையும் வாகனங்களாகக் கொண்டு தம் குழந்தை களை வெளியே சென்று வளரச் செய் கின்றன.

ஆமணக்கு விதைகளை நீங்கள் பார்த் திருக்கிறீர்களா? அவை பார்வைக்கு வண்டு கள் போலத் தோன்றும். அவற்றைப் பற வைகள் தம் தின்பண்டங்களெனக் கருதி எடுத்துப்போய், பிறகு தாம் ஏமாந்ததைக் கண்டு அவற்றை அங்கே போடும்.

இவ்வாறு தாவரங்கள் தங்கள் விதை களை மிகுந்த திறமையுடன் நாலாபக்கங் களிலும் பரப்புகின்றன.

| | | | |
|---|---|---|---|
| உணர்ச்சி | தோல் | எச்சமிடும் | பொதி |
| தாவரம் | ஓடு | சதை | வாகனம் |
| பாதுகாக்க | நெற்று | முற்று | ஏமாந்து |
| இனம் | சாறு | அகன்று | காரணம் |

## பயிற்சி

I. விடை எழுது :

1. விதைகளுக்குத் தோலும் ஓடும் எப்படிப் பயன்படுகின்றன ?

2. செடியாக வளர உதவுவன யாவை ?

3. சாறும் சதையும் உள்ள பழங்கள் சிலவற்றின் பெயர்களைச் சொல்.

4. அவற்ருல் பயன் என்ன ?

5. முற்றி வெடிக்கும் காய்கள் சில சொல்.

6. சில விதைகள் பறக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் கூறு.

7. பிராணிகளை வாகனமாகக் கொண்டு பரவும் விதைகள் யாவை ?

8. காட்டாமணக்கு பறவைகளை எப்படி ஏமாற்றுகிறது ?

II. இலக்கணம்

1. மாடு ஓடிற்று. இடையன் மாட்டை ஓட்டினுன்.—இவை இரண்டிற்கும் என்ன வேற்றுமை ?

ஓடிற்று என்பது தன்வினை.

ஓட்டினுன் என்பது பிறவினை.

பின்வரும் பிறவினைகளை வாக்கியங்களில் வைத்துக் காட்டு;—பாய்ச்சு, உருட்டு, போக்கு, விளக்கு.

2. சில சொற்கள் பெயர்களாகவும் வினைகளாகவும் வழங்கும். அவற்றின் பொருள் வேறுபாடுகளைக் காண வேண்டும். பரப்பு என்னும் சொல்லைக் கவனியுங்கள்:

இந்த அறையின் பரப்பு 200 சதுர அடி.

அரிசியைப் பலகையில் பரப்பு.

பின் வரும் சொற்களைப் பெயராகவும் வினையாகவும் பயன்படுத்திக் காட்டு: அகல், அடி, அடை, அணி அணை.

III. கட்டுரை:

ஒரு புல் தன் விதைகளை நோக்கி, "நீங்கள் தந்திரமாக வேறிடம் சென்று பிழையுங்கள்" என்று சொல்வது போலச் சொல்.

IV. பிரித்துக் காட்டு:—உயிருடன், பிழைத்திருக்கும், சூழ்ந்திருப்பதை, எச்சமிடும், வளர்ந்திருக்கும்.

———

## 8 கலிங்கப் போர்

குலோத்துங்கன் என்னும் சோழ வேந்தன் பதினோராம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆண்டான். கங்கை கொண்ட சோழபுரம் அவன் தலைநகரமாக இருந்தது. குலோத்துங்கனுக்கு அபயன் என்ற வேறொரு பெயரும் உண்டு. அவன் பல நாடுகளையும் வென்று தன் ஆட்சியைப் பெருக்கிக் கொண்டான்.

ஒரு முறை சோழன் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தான்; அங்கே இருந்த சித்திர மண்டபம் என்ற அரண்மனையில் கொலு வீற்றிருந்தான். அப்பொழுது பல சிற்றரசர்கள் அவனைக் கண்டு அடிபணிந்து அவனுக்குரிய கப்பப் பொருள்களைக் கட்டினர். முடிவில் அரசன், "கப்பங் கட்டாதவர் எவரேனும் உளரோ?" என்று கேட்டான். அருகிலிருந்தவர், "வட கலிங்க மன்னன் இரண்டு முறைகளாகக் கட்டவில்லை" என்று கூறினர்.

அச்சொற்களைக் கேட்ட சோழன் கோபக்குறி சிறிதும் காட்டவில்லை. தன் படைத் தலைவரை நோக்கி, "நம் யானைப் படைகளுடன் அந்நாட்டின்மீது படையெடுத்து அவனைக் கொணர்மின்" என்று

கட்டளையிட்டான். அபயனுடைய படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் என்பவன். அவன் அரசனை வணங்கித் தான் போய்க் கலிங்கத்தை வென்று வருவதாகக் கூறினான்.

தொண்டைமான் மிகச் சிறந்த வீரன்; சோழர் படைத் தலைவர்களுள் அவனே



சிறந்தவன். அவன் நால்வகைப் படைகளுடன் சென்றான்; பகைவர் நாட்டினுள் புகுந்தவுடன் அந்நாட்டு ஊர்களை யெல்லாம் சூறையாடினான். மக்கள் அஞ்சி நடுங்கி ஓடிச் சென்று தம் மன்னனான அனந்தபதுமனிடம் முறையிட்டார்கள். அவன் உடனே வெகுண்டெழுந்தான்;

சோழன் படைகளை ஒரு நொடியில் தொலைத்து விடுவதாக வீரம் பேசினான். அவனுடைய அமைச்சர்கள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவில்லை.

கலிங்கர் படையும் சோழர் படையும் கைகலந்தன. கருணாகரன் யானைமீது இருந்துகொண்டு கடும்போர் புரிந்தான். கலிங்கர் முறியடிக்கப்பட்டனர். தோற்ற வர்கள் தமிழர் படைக்குத் தப்பவெண்ணிப் பல்வேறு வேடங்களைப் புனைந்து கொண்டு ஓட்டம் எடுத்தனர். கலிங்க மன்னன் ஓடி ஒளித்துக்கொண்டான். தொண்டைமான் அங்குள்ள செல்வங்கள் பலவற்றையும் திரட்டிக்கொண்டு வந்து தன் மன்னன் முன் வைத்துப் பணிந்தான்.

இவ்வரலாற்றை ஓர் அழகிய நூலாகச் சயங்கொண்டார் என்னும் புலவர் பாடியுள் ளார். அதற்குக் **கலிங்கத்துப் பரணி** என்பது பெயர். தமிழிலுள்ள வீரச்சுவை நூல்களுள் இது மிகச் சிறந்தது.

| | | |
|---|---|---|
| கப்பம் | முறியடி | வேடம் |
| சித்திரமண்டபம் | சிற்றரசர் | பரணி |
| கொலுவீற்றிருத்தல் | பல்வேறு | வீரச்சுவை |

## பயிற்சி

I. விடை எழுது :

1. கலிங்கப் போர் எந்த மன்னன் காலத்தில் நிகழ்ந்தது ?

2. கருணாகரத் தொண்டைமான் யார் ?

3. கலிங்கம் எங்குள்ளது ? காஞ்சியிலிருந்து அதற்குப் போகும் வழி யாது ? படம் பார்த்துக் கூறு.

4. கலிங்கப் போர் எவ்வாறு முடிந்தது ?

5. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் யார் ?

II. இலக்கணம்

1. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள பெயர்ச்சொற்களை வினைமுற்றுக்களாக மாற்றி எழுது :—

(1) மாட்டின் தீனி புல் ஆகும்.
(2) தமிழரின் உணவு அரிசி ஆகும்.
(3) திருமாலின் படுக்கை பாம்பாகும்.
(4) யானையின் நடை வேகமானது.
(5) பிராணிக் கொலை கொடியது.
(6) கடலின் பரப்பு எல்லையற்றது.

2. பின்வரும் சொற்களைக் கூட்டி எழுது :—

வேறு + ஒரு, சிறுமை + அரசர்கள், அ + நாடு, வெகுண்டு + எழுந்தான்.

III. கட்டுரை

ஏதேனும் ஒரு போரைப் பற்றிப் பெரியவர்களிடம் கேட்டு நீ அதனை உன் சொந்த நடையில் கூறு.

## 9. விறகு வெட்டி பாடியது

தென் மதுரையில் வரகுண பாண்டியன் ஆட்சி செலுத்தி வந்தான். அவன் அவையில் பல கலைகளிலும் நிரம்பிய அறிவினர் பலர் குழுமி இருந்தனர். மன்னன் அவர்களைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வந்தான். அவனால் போற்றப்பட்ட கலைஞர்களுள் பாணபத்திரர் என்பார் ஒருவர். அவர் இசைக் கலையில் வல்லவராக இருந்ததோடு சிவபெருமான்மீது அளவிலா அன்பு வைத்திருந்தார்.

ஒருநாள் வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்னும் இசைப் புலவன் ஒருவன் மதுரை நகருக்கு வந்தான்; அரசனைக் கண்டு தன் இசைத் திறமைகளைக் காட்டினான். அரசன் அவனுடைய அறிவை மெச்சி அவனுக்குப் பலவகைச் சிறப்புக்களைச் செய்தனன். அவற்றால் இறுமாப்பு அடைந்த வடநாட்டுக் கலைஞன் தன் இசையறிவுக்கு மிஞ்சியது எதுவும் இல்லை என்றும், தன்னை வெல்பவர் உலகத்தில் எவரும் இல்லை என்றும் நாப்பறை அடித்துக்கொண்டிருந்தான். அவனுடைய மாணவர்கள் நகரம் எங்கும் திரிந்து தம் ஆசானின் திறத்தை அளவு கடந்து மிகுத்துக் கூறிக்கொண்டிருந்தனர்.

மன்னன் இவற்றைக் கேட்டுப் பொறுக்க முடியாமல் தன் அவைப் புலவரான பாணபத்திரனை விளித்து, "ஐயா, பிறன் ஒருவன் இவ்வாறு பிதற்றுவதை நான் பொறுக்க மாட்டேன். நாளை நீர் நம் அவையில் ஏமநாதன் முன்பு நம் தமிழ் இசையின் பெருமையை நிலைநாட்ட வேண்டும்" என்று கட்டளையிட்டான்.

பாணபத்திரருக்கு இது ஒரு சோதனை ஆயிற்று. ஏமநாதனின் இனிய பாடலைக்





கேட்டு அவரும் அவனை வியந்து, 'இவன் முன் நம் புலமை எங்கே!' என்று ஏங்கி யிருந்தார். அரசன் கட்டளையைக் கேட்டு

அவர் மனம் புழுங்கினர். அரசன் ஆணையை மறுக்க முடியாமல், "ஐய, தங்கள் அன்பும் சிவபெருமான் கருணையும் கொண்டு நாளை பாடுவேன்" என்று கூறி வெளியே சென்றார்.

நேரே அவர் சோமசுந்தரக் கடவுள் கோவில் சென்று வணங்கி, "இறைவா, நீயே எனக்குத் துணை. பாண்டிய நாட்டின் பெருமையையும் தமிழ் இசையின் உண்மைப் புகழையும் நிலைநிறுத்த நீயே துணை புரிய வேண்டும்" என்று வேண்டினர்.

அப்போது அந்தி வேளை. தெருவிலே ஒரு கிழவன் சுமக்க முடியாத விறகுச் சுமை ஒன்றைச் சுமந்துகொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றான். அவன் நேராக ஏமநாதன் தங்கியிருந்த விடுதியின் வாயிலில் தன் தலைச் சுமையை இறக்கிவிட்டு உட்கார்ந்தான்; தன் தோளில் கட்டியிருந்த பழைய யாழை எடுத்தான்; சாதாரி என்னும் பண்ணை இனிய குரலில் பாடினன்.

அவ்விசையைக் கேட்டு வானத்தில் பறந்த பறவைகள் மயங்கி வீழ்ந்தன. தம் கன்றுகளை எண்ணி வீடுகளுக்கு விரைந்து சென்றுகொண்டிருந்த கறவை மாடுகள் மேலே செல்லாமல் அங்கே நின்றன.

இசையைக் கேட்டு ஏமநாதன் வீட்டி லிருந்து வெளியே வந்தான். ஓர் எளிய விறகு வெட்டி தன் வீட்டு வாயிலில் அமுதத்தையும் தேனையும் பாலையும் குழைத்துப் பாடுவதைக் கண்டு வியப்பு அடைந்தான்.

அவன் அம் முதியோனை அணுகி, "ஐயா, தாங்கள் யார்?" என்று கேட்டான். அதற்குக் கிழவன், "ஐயா, நான் ஓர் ஏழை விறகு வெட்டி. எனக்குச் சிறிது இசைப் பயிற்சி உண்டு. அதில் நல்லறிவு பெறலாம் என்று என் ஊர் அரண்மனை இசைப் புலவரிடம் சென்று இசை கற்பிக்க வேண் டினேன். அவரும் என் எளிமையைப் பாராட்டாமல் அன்புடன் கற்பித்தார்.

ஆனால், நான் தம் இசைப் புலமைக்கு ஏற்றவனாக இல்லை என்று என்னை விலக்கி விட்டார். அப்பெருமானுடைய சிறந்த அறிவு எங்கே? வயதில் முதிர்ந்த என் அறிவீனம் எங்கே? நான் விறகு வெட்டியா வது பிழைக்கலாம் என்று அவ்வாறே செய்து வருகிறேன்" என்றான்.

இச்சொற்களைக் கேட்ட வடநாட்டுப் புலவனுக்குக் கிலி பிடித்துக் கொண்டது. ஊர் முழுவதும் தன் பெருமையைப் பறை

அடித்தபின் மறுநாள் பாணபத்திரர்முன் படுதோல்வி அடைய அவன் மனம் இசைய வில்லை. அவன் அன்று இரவு எவரும் அறி யாமல் ஓடிவிடத் தீர்மானித்தான்; அவ் வாறே செய்யவும் செய்தான்.

மறுநாள் அரசனின் அவை கூடிற்று. பாணபத்திரர் கடவுளை மனத்தில் எண்ணிய படி நடுக்கத்துடன் அவையுள் புகுந்தார். நகர மக்கள் அனைவரும் இசைப் போட்டி யைக் காண அங்கே குழுமினர். ஏமநாதன் சென்ற இடமே தெரியவில்லை. பாணபத் திரரே வென்றுர்.

| | | | |
|---|---|---|---|
| செங்கோல் | இசை | இறுமாப்பு | அந்தி |
| கலை | திறமை | கலைஞன் | மணி |
| யாழ் | குழுமி | மெச்சு | ஆசான் |
| சோதனை | பண் | கிலி | போற்றி |
| சிறப்பு | விளித்து | ஏங்கி | எழுந்தருள் |

## பயிற்சி

விடை எழுது:

1. பாணபத்திரரின் இயல்புகள் யாவை?
2. ஏமநாதன் செருக்குற்றுச் சொன்னவை யாவை?
3. பாணபத்திரர் கடவுளை வேண்டியது என்ன?

4. கிழவன் தன் வரலாற்றை எப்படிக் கூறினன்?

5. ஏமநாதன் ஓடக் காரணம் என்ன ?

II. இலக்கணம்

1. இரண்டாம் பாராவிலுள்ள அடைந்து, கண்டு, மெச்சி, திரிந்து, மிகுந்து-இச்சொற்கள் என்ன சொற்கள் அவை கொண்டு முடியும் பிற சொற்கள் யாவை ?

2. அடைந்த, கண்ட, மெச்சிய, திரிந்த, மிகுந்த-இச்சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டு. இவை என்ன எச்சங்கள் ?

3. பின்வருவனவற்றைப் பெயராகவும் வினை யாகவும் பயன்படுத்தி அவற்றிற்குப் பொருள் கூறு :—

பணி, இசை, குழை, தழை, பண், கலை.

III. கட்டுரை

1. 'இசை எவரையும் தன் வசப்படுத்தும்' இப் பொருளை விரித்துப் பத்து வரிகள் எழுது.

2. ஏமநாதனைக் காணுமல் மகிழ்ந்த பாணபத்திரர் கடவுள் முன் சென்று தம் நன்றியைச் செலுத்தியதாக ஒரு கட்டுரை எழுது.

## 10. ஆறு

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடும்செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளிரப்பயிர் கண்டு வந்தேன்.
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்.
தீங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன்.

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

—தேசிக விநாயகம் பிள்ளை.

## குறிப்புரை

அழல்-நெருப்பு. பொழில்-சோலை. கால்-வாய்க்கால். நேயமுற-அன்பு பொருந்துமாறு. தேங்கனி-தேங்காய். அல்-இரவு. ஆழி-கடல்.

## பயிற்சி

I. விடை எழுது :

1. ஆறு எப்படித் தவழ்ந்து பாய்கிறது ?

2. ஆறு ஆசை தீர விளையாடுவதால் உண்டாகும் பலன் யாது ?

3. ஆறு சுமந்துவரும் பொருள்கள் யாவை ?

4. "நில்லும் எனக்கினி நேரமில்லை" ஆறு ஏன் இவ்வாறு கூறுகின்றது ?

II. இலக்கணம்

நடத்தினான், செய்தான், பாடுவித்தான், நின்றான், ஓடினான், பேசுவித்தான் — இவை என்னென்ன வினைகள் ?

III. தவழ்ந்து தவழ்ந்து—அடுக்குத் தொடர். இது போன்ற அடுக்குத் தொடர்கள் இரண்டினைக் கூறு,

IV. 'ஆழி இறைவன்' என்று ஆறு சொன்னதற்குரிய காரணத்தை விளக்கிக் கூறு.

# 11. மாமல்லபுரம்

தமிழகம் எப்பொழுது உண்டாயிற்று? தமிழ் மக்கள் எப்பொழுது தோன்றினர்? தமிழ் மொழி எப்பொழுது பிறந்தது? இக் கேள்விகளுக்கு விடை எவராலும் சொல்ல முடிவதில்லை. உலகத்தில் மிகப் பழையவர் தமிழர். உலக மொழிகளுள் மிகப் பழையது தமிழ் என்று மட்டும் நாம் கூறலாம்.

இத்தகைய பழமை வாய்ந்த தமிழகத்தின் வரலாறு மிகப் பழமையானது; இதன் நீண்ட கதையில் எத்தனையோ அரசியல்கள் தோன்றி மறைந்துள்ளன. எத்தனையோ நகரங்கள் தோன்றி மறைந்துள்ளன. அவற்றுள் மண்ணுக்குள் மறைந்து போனவை சில. கடலில் முழுகிப் போனவை சில. சில நகரங்கள் தம் பண்டைப் பெருமையும் உருவமும் சிதைந்து சிற்றூர்களாக இப்பொழுது விளங்குகின்றன. சில அவ்வாறு சிதைந்து போனாலும், தம் பழைய பெருமையைக் காட்டும் அறிகுறிகளுடன் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றும் இடங்களில் மாமல்லபுரம் ஒன்று.

மகாபலிபுரம், மாவலிபுரம், மல்லபுரி, கடல்மல்லை, மாமல்லபுரம் என்ற வெவ்வேறு

பெயர்களுடன் இவ்வூர் அழைக்கப்படுகிறது. இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் இப்பொழுது ஒரு சிற்றூராகக் காணப்படுகிறது. அதனைக் கண்டு வியப்பு அடைந்து, அங்கே தோன்றும் அருமையான காட்சிகளை ஆவலுடன் படம் பிடித்துச் செல்லும் வெளி நாட்டினர் ஆயிரக் கணக்கினர் ஆவர்.



இவ்வாறு உலக மக்களை வியக்கச் செய்யும் பெருமை அங்குள்ள கற்கோவில்களையே சேரும். கடற்கரை ஓரமாய்ப் பெரிய பாறைகளும் சிறிய குன்றுகளும் அங்கே இருக்கின்றன. ஒரு காலத்தில் அவ்வூர் பெரிய நகரமாகவும் சிறந்த துறைமுகமாகவும் இருந்து வந்தது. அரசர்கள் அங்கிருந்து நாட்டை ஆண்டு வந்தார்கள்.

ஆகவே அவ்வரசர்களின் கவனம் பாறை களிற் சென்றது. அவர்கள் அவற்றைச் செதுக்கியும் குடைந்தும் பல தேர்களையும், கோவில்களையும், உருவங்களையும் அமைத் தார்கள். பல்லாயிரக் கணக்கான கல் தச்சர்கள் பல்லாண்டுகள் அங்கே உழைத்



திருக்க வேண்டும். அவர்களின் உழைப்பின் பயனே, பல அரசுகள் அழிந்தும் நகரங்கள் சிதைந்தும் நிலை குலையாமல் இன்றும் இருக் கின்றது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் காஞ்சி புரத்தில் பல்லவர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுள் நரசிம்மவர்மன் சிறந்த மன்னன் அவனுக்கு மாமல்லன் என்னும் ஒரு பெய ரும் உண்டு. அவன் காலத்திலேதான் இக் கோவில்களிற் பல குடைந்து எடுக்கப்பட் டன என்று கூறுகிருர்கள். ஆனல், அவ்

வரசனுக்கு முன்னும் பின்னும் எழுந்த கல் வேலைகளை அங்குக் காண்கிறோம்.

மாமல்லபுரத்துக் காட்சிகளை நாம் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். தேர்கள் அல்லது கற் கோவில்கள் ஒரு பிரிவாகும். உருவங்கள் மற்றொரு பிரிவாகும். சிங்கம், யானை, எருது போன்று தனித் தனி உருவங்களாக அமைந்தவை சில; மானிட உருவங்களாகவும் பிற உயிர் இனங்களின் உருவங்களாகவும் பாறைகளின் ஓரங்களில் ஓவியங்கள் போல் செதுக்கி வைக்கப்பட்டவை பல.

வெளி நாட்டினர் மாமல்லபுரத்திற்கு ஏழு கோவில்கள் என்னும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அங்கே காணப்படுவன ஐந்து தேர்களே. அவை பஞ்சபாண்டவர் தேர்கள் என இப்பொழுது வழங்குகின்றன.

நகுல சகாதேவர் தேர், திரௌபதி தேர், அர்ச்சுனன் தேர், பீமன் தேர், தருமராசர் தேர் என்பன அவை. இவற்றுள் நகுல சகாதேவர் தேர் தனித்து நிற்கிறது. மற்றவை ஒரே கல்லில் குடையப்பட்டவைப் போல ஓரிடத்தில் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றையும் விரித்துச் சொல்ல இங்கே இடம் இல்லை. இவை தேர்கள் அல்ல; சிறிய

சிறிய கோவில்களே. பிற்காலத்தில் தென்னிந்தியக் கோவில்களில் உருவச் சிலைகளின் மீது அமைக்கப்பட்ட விமானம், மண்டபம், கோபுரம் என்ற பகுதிகளெல்லாம் இவற்றைப் பார்த்தே தோன்றின என்பர். இந்தத் தேர்களில் வேலைப்பாடு முடியாமல் சில அரைகுறையாக நிற்கின்றன. ஆனால், உருவமற்ற பெரும் பாறைகளைச் செதுக்கியும், வெட்டியும், குடைந்தும் விமானங்கள் முதலியவற்றை அமைத்த சிற்பிகளின் திறத்தைப் புகழாமல் நாம் என்ன செய்ய இயலும்?

தருமராசர் தேர் நான்கு மாடிகளைப் பெற்று இருக்கிறது. இதில் பல உருவங்கள் காணப்படுகின்றன.

இத்தேர்களே அன்றி அங்கே நாம் மகிஷாசுர மர்த்தனி மண்டபம், கிருஷ்ண மண்டபம், அர்ச்சுனன் தவம், பஞ்ச பாண்டவ மண்டபம், கணேசர் கோவில், வராகசாமி கோவில் முதலிய பலவற்றைக் காணலாம்.

துர்க்காதேவி மகிஷாசுரனை வதைப்பது உயிர் ஓவியமாகக் காணப்படுகிறது. தேவி சிங்க வாகனத்தின்மீது ஏறித் தன் இரு கைகளாலும் போர் புரிகிருள்; எருமை முகமுடைய அரக்கன் பின்வாங்குகிருன். இரு படைகளும் போர் புரிகின்றன.

அர்ச்சுனன் தவம் சிற்ப வேலைக்குச் சிகரம் வைத்ததுபோல் விளங்குகிறது. இச் சிற்பம் 96 அடி நீளமும் 43 அடி அகலமும் உள்ளது. இதனில் காணப்படும் உருவங்களுக்குக் கணக்கில்லை. ஒரு பெரிய யானையின் கொம்புகளுக்குக் கீழே ஒரு பூனை தவம் புரிவதையும் அதனைக் கண்டு எலிகள் அச்சம் இல்லாமல் விளையாடுவதையும் காணும்போது சிற்பியின் நகைச்சுவை நமக்குப் புலனாகிறது.



இன்னும் இவ்வூரில் காணவேண்டிய இடங்கள் பல உண்டு. கடற்கரைக்கோவில் என்பது அவற்றுள் ஒன்று. இது மிக அழகாகக் கட்டப்பட்ட ஒரு கற்கோவில். இதைப் போன்று வேறு சில கோவில்களும் கரை

ஓரத்தில் இருந்தன என்றும் அவை கடலில் முழுகிவிட்டன என்றும் கூறுகிருர்கள். இதனுள் கடவுள் உருவங்கள் பல காணப் படுகின்றன.

இவ்வளவு அரிய வேலைகளைச் செய்த நம் முன்னோர்களின் பெருமையை நாம் எவ்வாறு கொண்டாடுவோம்? அழகுக்கும் கலைக்கும் என அவர்கள் தம் ஆயுளையே ஒப்படைத்தார்கள். அவர்களின் இணை யற்ற திறமையை அழிந்தன போக எஞ்சி யிருக்கும் சில நினைவுக் குறிகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. அவையேனும் நீடூழி வாழ்வனவாக.

| | | |
|---|---|---|
| சேரும் | கற்கோவில் | விமானம் |
| கருங்கல் | துறைமுகம் | மண்டபம் |
| வெவ்வேறு | சிதை | கோபுரம் |
| கைத்திறன் | ஓவியம் | சிற்பி |
| கவனம் | நிலைகுலையாமல் | இணையற்ற |
| செதுக்கு | முன்னும் | நீடூழி |

### பயிற்சி

1. விடை எழுது :

1. மகாபலிபுரம் எங்கே இருக்கிறது ?

2. அங்குள்ள கோவில்கள் எப்படிக் கட்டப்பட் டுள்ளன ?

3. கோவிலின் பல பகுதிகளையும் கூறுக.

4. பஞ்சபாண்டவர்கள் யாவர்?

5. மகிஷாசுரன் யார்? அவன் யாரால் கொல்லப்பட்டான்?

6. படங்களில் காணும் காட்சிகள் யாவை?

II. வெட்டு, செதுக்கு, குடை, அடுக்கு—இவற்றின் பொருள் வேற்றுமை என்ன?

III. இணையற்ற—இதனைப் போல அற்ற என்பதைப் பின்வரும் சொற்களோடு கூட்டுக:— எண், கணக்கு எல்லை.

IV. இலக்கணம்

மகாபலிபுரத்தில் நாம் பல கோவில்களைக் காண்கிறோம்,- இவ்வாக்கியத்தில் மூன்று பெயர்ச் சொற்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பெயர்ச் சொல்லுக்கும் வகை, எண், பால், இடம், வேற்றுமை, முடிவு இவற்றைக் கூறு.

V. கட்டுரை

நீ மகாபலிபுரம் போய் அங்குள்ள கலைப்பொருள்களைக் கண்டதாக உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

# 12. காட்டு விலங்குகள்

சிங்கம், புலி, கரடி, ஓநாய், காண்டா முதலிய விலங்குகளைப் பார்த்திருக்கிறீர்களா? இவை காட்டு விலங்குகள் எனப்படும். இவை மனிதரைக் கொன்றுவிடும். ஆகையால் இவற்றை நாட்டுக்குள் வரவிடுவதில்லை. இவை மனிதருடன் பழகுவதில்லை. எனவே, இவை காட்டிலே வாழ்கின்றன.



மான், மலையாடு, காட்டு எருமை, யானை, குரங்கு, ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி முதலியவைகளும் காட்டில் வாழும் விலங்குகளே. ஆனால் இவற்றுள், மான்,

யானை, குரங்கு முதலியவை மனிதருடன் நன்கு பழகுகின்றன. அவர்கள் இடும் வேலைகளைச் செய்து, மக்களுடன் சேர்ந்து வாழ்கின்றன. எனவே, இவை நாட்டில் மக்களுடன் வாழ்கின்றன.



இத்தகைய விலங்குகளை நாம் எப்படிக் காண்பது? நாட்டில் பழகும் விலங்குகளாகிய யானை, மான், குரங்கு முதலியவற்றை நாம் நேரில் காணமுடியும். மக்களுடன் இருந்தே வாழுகின்ற நாய், பூனை, ஆடு மாடுகள், குதிரை முதலியவற்றையும் நாம் நேரில் காணமுடியும். ஆனால் சிங்கம், புலி போன்றவற்றை நாம் நேரில் காணமுடியுமா? ஆம்; சென்னை விலங்குக் காட்சி நிலையத்தில் காட்டு விலங்குகள் அனைத்தும் பெரிய இருப்புக் கம்பிகளால் ஆன கூடுகளில் வைத்து வளர்க்கப்படுகின்றன. அவற்றை நாம் அங்குச் சென்று நேரில் காணலாம். சென்னை விலங்குக் காட்சி நிலையம் போன்று,

மைசூரிலும், திருவனந்தபுரத்திலும் விலங்குக் காட்சி நிலையங்கள் இருக்கின்றன. இவ்விலங்குக் காட்சி நிலையங்களில் மேலே



சொன்னவை மட்டுமின்றி, வரிக்குதிரை, நீர் யானை முதலிய காட்டு விலங்குகளையும் காணமுடிகிறது.

நம் நாட்டில் காடுகளில் எல்லா வகையான விலங்குகளும் இருக்கின்றன. வங்காளக் காடுகளில் வரிப்புலிகள் மிகுதியாக இருக்கின்றன. மைசூர்க் காடுகளிலும், திருவாங்கூர்க் காடுகளிலும் யானைகள் மிகுதியாய் இருக்கின்றன. தமிழ் நாட்டுக்

காடுகளில் சிறுத்தைப் புலிகள் மிகுதியாய் இருக்கின்றன.

என்றாலும், நாளுக்கு நாள் மக்கள் காடுகளை அழித்துக்கொண்டு வருவதால், காட்டு விலங்குகள் வாழ இடமின்றிச் செத்து ஒழிந்து வருகின்றன. இதே நிலைமை நீடித்தால், இன்னும் ஐம்பதாண்டுகளுக்குப்பின், காட்டு விலங்குகள் பார்ப்பதற்கே இல்லாமல் போய்விடும். பழங்காலத்தில் இன்னும் எத்தனையோ வகையான விலங்குகள் இருந்தனவாம். இன்று நாம் அவற்றைக் காணமுடியாமல் அவை அழிந்தன. இது போலவே, காடுகளை அழிப்பதால், இன்று நாம் காணும் விலங்குகளும், நம் பிற்காலத் தலைமுறையினர் பார்ப்பதற்கு இல்லாமல் அழிந்து போய் விடுதல்கூடும்.

மேலும், காடுகளை அழிப்பதால் வேறு ஒரு தொல்லையும் இருக்கிறது. காடுகள் நிறைந்திருக்கும் நாட்டில்தான் மழை நன்றாகப் பெய்யும். மேகங்கள் சூழ்ந்திருக்கும் வானத்தில் குளிர்ந்த காற்று வீசச் செய்து அவற்றை மழையாகப் பொழிய வைப்பவை மரங்கள் அடர்ந்த காடுகளே.

எனவே, காடுகளை அழிப்பது நாட்டை வறண்டுவிடச் செய்வதாகும். அதனுடன்

அங்கு வாழும் உயிர் இனங்களையும் ஒழித்து விடுவதாகும்.

மேலும், விலங்குகளிடம் நாம் இரக்கங் காட்டி நடந்து கொள்ளவேண்டும். வீட்டில் நம்முடன் பழகும் விலங்குகளிடமோ காட்சி நிலையங்களில் காணச் செல்லும் விலங்கு களிடமோ இரக்கம் கொள்ளல் வேண்டும். அவற்றை எவ்வகையிலும் துன்புறுத்தக் கூடாது.

காட்டு விலங்குகளில் நமக்குப் பயன் படுபவை பல ஆகும். யானை செய்யும் வேலைகள் அளவில்லாதவை. மிகுந்த பளு வான பொருள்களைத் தூக்கி வைக்கும் வேலைகளை யானைகள் நன்ருகச் செய்கின் றன. மலையாள நாட்டிலும், இலங்கையிலும், பர்மா நாட்டிலும் யானைகள் கடினமாக உழைப்பதை நேரில் காணலாம். தமிழகத் தில் அவை கோவில்களில் இருக்கின்றன. நம் மக்கள் அவற்றின்மீது ஊர்ந்து செல்ல விரும்புகின்றனர். பழங்காலத்தில் மன்னர் யானைமீது ஊர்ந்து நகர்வலம் வருதல் வழக் கம். போரில் பயன்படுத்த யானைப் படை களும் நம் மன்னர்களிடம் இருந்தன. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்னும் பழமொழி

வழங்குவதிலிருந்து அதன் பெருமையை உணரலாம்.

மணற்பாங்கான பகுதிகளாக உள்ள நாடுகளில் ஒட்டகம், வாகனமாகப் பயன் படுகிறது. ஒட்டகத்தின் பாலை அங்குள்ள மக்கள் குடிக்கின்றனர்.

குரங்குகளைப் பழக்கி வேலை வாங்கு தலும் உண்டு. திரைப் படங்கள் எடுப்போர் இப்போது குரங்குகளை நடிக்க வைத்துப் படம் எடுக்கின்றார்கள் அல்லவா? குரங் காட்டிகள், குரங்குகளைப் பல வகையாக ஆடச் செய்து பொருள் சம்பாதிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

கரடிகளையும் மனிதர்கள் பழக்கிவிடு கின்றனர். சிலர் கரடிகளைக் கூத்தாடப் பழக்கிக் காசு சம்பாதிப்பதை நீங்கள் பார்த்து இருக்கலாம்.

சிங்கம், வேங்கைப்புலி, சிறுத்தைப்புலி போன்றவைகளையும் இக்காலத்தில் மனிதர் கள் பழக்கிப் பல வகையாக ஆட வைப் பதைச் சர்க்கசுக் காட்சிகளில் நீங்கள் கண் டிருக்கலாம்.

எனவே, காட்டு விலங்குகள் மக்களுக் குப் பல வகைகளில் பயன்படுவதால்,

அவற்றைத் துன்பப்படுத்தாமலும், அழிக்காமலும், அவை வாழும் காடுகளை அழித்து விடாமலும் இருக்க வேண்டுவது நம் கடமையாகும்.

| | | | |
|---|---|---|---|
| சிங்கம் | பழகுதல் | ஒட்டகம் | நீர்யானை |
| புலி | மான் | கரடி | மலையாடு |
| குதிரை | வரிப்புலி | ஓநாய் | வங்காளம் |
| மைசூர் | காண்டா | யானை | நீடித்தால் |
| விலங்கு | குரங்கு | சர்க்கசு | ஒட்டகம் |
| வறண்டு | பர்மா | இரக்கம் | இலங்கை |

பயிற்சி

I. விடை எழுது:

1. நாட்டுக்குள் வரவிடாத காட்டு விலங்குகள் யாவை?

2. மனிதருடன் பழகும் காட்டு விலங்குகள் எவை?

3. காட்டு விலங்குகளை நாம் எப்படி நேரிற் காண்பது?

4. விலங்குக் காட்சி நிலையங்கள் எங்கெங்கு இருக்கின்றன?

5. நம் நாட்டில் உள்ள காட்டு விலங்குகள் எவை?

6. காடுகளை அழிப்பதால் ஏற்படும் தொல்லைகள் யாவை?

7. மனிதருக்குப் பெரிதும் பயன்படும் காட்டு விலங்குகள் எவை?

8. நம் கடமையாது?

II. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை எழுது:

1. ———— போன்றவற்றை நேரில் காண முடியுமா?

2. தமிழ் நாட்டுக் காடுகளில் ————மிகுதியாய் இருக்கின்றன.

3. ———— அழிப்பதால் மற்றும் ஒரு ———— இருக்கிறது.

4. காடுகள் நிறைந்த நாட்டில்தான் ———— நன்ருகப்————.

III. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

சூழ்ந்திருக்கும், மிகுதியாக, இரக்கங்காட்டி, எவ்வகையிலும், நீடித்தல், தலைமுறையினர்.

IV. இலக்கணம்

1. இப்பாடத்தில் உள்ள முதலிரண்டு பாராக்களில் காணப்படும் எழுவாய், பயனிலை, செயப்படு பொருளைத் தனியே எடுத்து எழுது.

2. வினைச்சொல்–செய்யும் வேலையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இது காலம் காட்டும்.

வினைச் சொல்-வினை முற்று, எச்சவினை என இரண்டு வகைப்படும்.

பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல் வினைமுற்று எனப்படும் கந்தன் வந்தான். கடா மேய்த்தான் ;

இவற்றுள் வந்தான். மேய்த்தான் என்பவை வினை முற்றுக்கள்.

எச்சவினை-பெயரெச்சம், வினை எச்சம் என இரு வகைப்படும்.

பொருள் முடியாமல் எச்சமாயிருக்கும் வினைச்சொல் பெயரைத் தழுவினால் பெயரெச்சம் ; வினையைத் தழுவினால் வினை எச்சம். ஓடுகின்ற நாய்-இது பெயரெச்சம். ஓடி வந்தான்-இது வினை எச்சம்.

3. பார்த்து + இருக்கலாம் — பார்த்திருக்கலாம். இவ்வாறு சேறும் சொற்கள் மற்றும் நான்கை எடுத்துப் பிரித்து எழுதிக்காட்டு.

---

# 13. ஏழு பெரும் விந்தைகள்

இயற்கை விந்தைகள் உலகத்தில் பல இருக்க, மனிதன் தன் அறிவால் இயற்றிய செயற்கை விந்தைகளும் பல உண்டு. மானிடரின் வியக்கத்தக்க செயல்களில் அழகு நிறைந்த ஏழினை மட்டும் எடுத்துக் காட்டி, 'உலகப்பெரு விந்தைகள்' என்று அக்கால மக்கள் கூறிவந்தனர். ஆனால் அவற்றில் பல இன்று அழிந்துவிட்டன. எனினும், மக்களின் கருத்தில் அவற்றின் பெருமை குறையவில்லை. அவற்றைப் பற்றி இங்குக் காண்போம் :




மேற்கே பாபிலோனியா என்னும் நாடு ஒன்று இருந்தது. அதனை இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னே ஒரு மன்னன் ஆண்டான். அவனுடைய மனைவி மலைநாட்டினள். பாபிலோனியா ஒரு சமவெளி நாடு. அவள் மலை வளம் பார்த்துப் பார்த்துப் பழகினவள்.

ஆகையால், ஒரு குன்றுகூடக் காணக் கிடைக்காத பாபிலோனியாவைக் கண்டு சலிப்புற்ருள். அக் குறையை நிரப்ப அரசன் அவளுக்காக விந்தையான பூந்தோட்டம் ஒன்றை உண்டாக்கினுன்.

மாடிமேல் மாடியாக அவன் அத் தோட்டத்தை முந்நூறு அடி உயரத்தில் அமைத்தான்; செடிகள், கொடிகள், மரங் கள், சோலேகள், அருவிகள், ஓடைகள் பலவற்றையும் அங்கே அமைத்தான்; பல இயந்திரங்களேக் கொண்டு அவற்றிற்கு நீர் பாய்ச்சச் செய்தான். அரசி அத்தோட்டத் தில் உலாவித் தன் காலத்தைக் கடத் தினுள். இது உலக விந்தை களில் முதன்மை யானது. ஆனுல், இன்று காணுதற் கில்லே.




இரண்டாவதாகக் கொண்டாடப் பட்டு வந்தது கிரேக்க நாட்டில் ஒலிம்பியா என்ற இடத்தில் அமைந்த ஒரு தெய்வ உருவம்.

அதனைப் பைடியஸ் என்ற சிற்பி அமைத்தார். அதன் உயரம் அறுபது அடி. அது பொன், தந்தம் இவற்றால் செய்யப்பட்டிருந்தது. அதன் சிறந்த தோற்றத்தைக் காண உலக மக்கள் விரும்பி அவ்வூருக்குச் செல்வார்கள். அதுவும் அழிந்தது.

ஆசியா மைனர் என்ற நாட்டை ஒரு முறை கிரேக்கர்கள் கைப்பற்றினார்கள். அங்கே எபீஸஸ் என்ற ஊரில் அவர்கள் ஒரு கோவில் அமைத்தார்கள். அதனை



அவர்கள் ஐந்து முறை புதுக்கிப் பெரிதாக்கினார்கள். இவ்வாறு அக்கோவிலை முற்றிலும் கட்டி முடிக்கப் பல ஆண்டுகள் பிடித்தன. அதன் பெருமை உலகெங்கும் பரந்தது. ஆனால் சில அயல் நாட்டினர் வந்து அவ்வூரைக் கைப் பற்றிய போது அவர்கள் அதனை இடித்துத் தரையோடு தரையாக்கினர். அதன் சில பகுதிகளை இன்று

இலண்டன் மாநகரப் பொருட்காட்சி நிலை யத்தில் காணலாம். இக்கோவிலின் காலம் ஏறக்குறைய இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர்.

அதே காலத்தில் ஆசியா மைனரின் மற்றொரு பகுதியில் டிரசோலசு என்னும் சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் இறந்த போது அவன் உடலைப் புதைத்த இடத்தில் அவன் மனைவி ஒரு சமாதி எழுப் பினாள். அக் காலத்தில் விளங்கிய பெரிய சிற்பிகள் பலரை யும் அவள் அழைத்துஅச்சமா தியைக் கட்டி முடித்தாள். அவர் கள் அரசனின் சவக் குழிக்கு மேலே ஒரு நீண்ட சதுரமான மேடை யைக் கட்டினார் கள். அதன் மீது வேலைப்பாடு அமைந்த பல தூண்களை நிறுத்தி



அவற்றின் மீது ஒரு தளம் பரப்பினார்கள்.

அத்தளத்தின் மீது நான்கு குதிரைகள் பூட்டிய தேர் ஒன்று அமைக்கப்பெற்றது. அத்தேரின் தட்டில் அரசன் அரசி இவர்களின் உருவங்கள் வைக்கப்பட்டன. அந்தச் சமாதிக்கு மாஸோலியம் என்று பெயர் இடப்பட்டது. அதைப் பின்பற்றிக் கிறித்தவர்கள் இன்றைக்கும் தாம் கட்டும் சமாதிக் கட்டடத்திற்கு மாஸோலியம் என்ற பெயரையே இடுகிருர்கள். இது நான்காவது விந்தை. இதுவும் காலத்தால் அழிந்தது.

ஐந்தாவது விந்தை ரோட்ஸ் என்னும் தீவில் கிரேக்கரால் கட்டப்பட்ட கதிரவனின்



உருவம். அதன் உயரம் நூறு அடி. அவர்கள் செம்பையும் ஈயத்தையும் உருக்கி ஊற்றி அவ் வுருவத்தைச் செய்தார்கள்; அதனை அந்நகரத் துறைமுகத்தின் வாயிலில் வைத்தார்கள். அவ்வாறு அவ்வூரைக் கதிரவன் அறுபது ஆண்டுகளே காத்து வந்தான். அதன் பிறகு

அங்கே ஒரு பூகம்பம் உண்டாக அஃது ஆடிச் சரிந்து விழுந்துவிட்டது. அதனை மக்கள் துண்டாடி வெண்கல விலைக்கு விற்றுக் கொண்டார்கள்.

எகிப்து தேசத்திலே பாலோஸ் என்ற தீவில் அதன் அரசன் ஒரு கலங்கரை விளக்கம் அமைத்தான். அது ஐந்நூறு அடி உயரமுள்ளது; அடி முதல் முடி வரையில் சலவைக் கற்களால் அது செய்யப் பட்டிருந்தது. அதன்மீது வெயில் படும்போது ஒரே ஒளி வடிவாய் அது திகழும். இவ்வாறு இரவும் பகலும் ஒளி வீசிக் கொண்டிருந்த அவ்விளக்கும் இன்று இடம் தெரியாமல் போய்விட்டது.



பண்டைய உலக விந்தைகளுள் இன்றும் அழியாவல் நிற்பவை எகிப்திலுள்ள பிரமிடு கட்டடங்களே. வரலாற்றுக் காலத்துக்கு முன்னே எகிப்து மன்னர்களை அடக்

கம் செய்து, அவ்விடங்களின் மேல் கட்டப் பட்டவைகளே இப்பிரமிடுகள். இறந்து போன உடல்களை வாசனைப் பொருள்களால் நிரப்பி இறந்தவர்களுக்கு விருப்பமான பொருள்களை அருகில் வைத்துப் புதைப்பது அந்நாட்டு வழக்கம்.

இப்பிரமிடுகள் அடிப்புறம் அகன்று சதுர அளவில் இருக்கும். உச்சிப்புறம் குறுகி முனையாக இருக்கும். இவ்வாறு எகிப்தில் ஏறக் குறைய எழுபது பிரமிடுகள் காணப் படுகின்றன. அவற்றுள் மிகப் பெரியதாக உள்ள ஒன்றினுடைய அடிப்புறம் ஒரு பக்கம் ஒன்றரைக் கல் தொலை அளவு நீண்டும், நானூற்றெண்பத் தோரடி உயர்ந்தும் உள்ளன.




இத்தகைய பிரமிடுகளில் பல நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பர். உல

கத்துப் பழைய கட்டடங்களுள் அழியாமல் இன்றும் உள்ள இவைகளே மிகச் சிறந் தவை.

இவ்வாறு பழைய விந்தைகள் ஏழு என மக்கள் கணக்கிட்டு இருந்தாலும், இவற்றை விட விந்தையானவை இன்னும் எத் தனையோ இருந்து அழிந்து போயிருக்க வேண்டும். புதிய விஞ்ஞான உலகில் காணப்படும் விந்தைகளும் அளவிலடங்கா. இவை யாவும் மனிதன் ஆற்றலை வெளிப் படுத்துபவை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| இயற்கை | சலிப்புற்ருன் | தளம் | செயற்கை |
| இயந்திரங்கள் | பகைஞர் | கதிரவன் | துண்டாடி |
| அடக்கம் | திகழும் | உச்சி | அற்புதம் |

### பயிற்சி

I. விடை எழுது:

1. பாபிலோனியா தோட்டம் எத்தகையது ?
2. ஒலிம்பியா நகரில் இருந்த விந்தை எது ?
3. எபீஸஸ் ஊர்க்கோவில் எவ்வாறு அழிந்தது ?
4. டிரசோலசு சமாதி எப்படிக் கட்டப்பட்டது ?
5. மாஸோலியம் என்னும் பெயர் எவ்வாறு உண்டாயிற்று ?

6. கதிரவன் காத்துவந்த ஊர் எது?

7. எகிப்தியர் இறந்த மக்களை எவ்வாறு புதைத்து வந்தனர்?

8. இரவும் பகலும் ஒளி வீசிய கலங்கரை விளக்கம் எது?

II. இவற்றைச் சொந்த வாக்கியங்களில் பயன் படுத்து:—வியக்கத்தக்க, மலைவளம், விஞ்ஞான உலகு, பெரும்பாலான, கலங்கரை விளக்கம், அளவிலடங்கா, நுகர்தற்குரிய.

III. ஆட்சி, கல்வி, காட்சி, தோற்றம்—இவை எவற்றின் அடியாகப் பிறந்தவை?

IV. இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்து:

1. சிற்பிகள் கோயிலைக் கட்டி முடித்தான்.

2. அரசன் தன் மனைவிக்காக ஒரு தோட்டம் இயற்றினர்,

3. அரசன் மனைவி ஒரு சமாதி எழுப்பினன்.

# 14. இறவாதவர் எவர்?

(ஒரு நாடகம்)

**இடம்:** தோட்டம்

**காலம்:** காலை

**உறுப்பினர்:** புத்தர், ஒரு பெண்.

[புத்த பகவான் ஓர் அரசமரத்தடியில் அமர்ந்து இருக்கிறார். ஒருத்தி இறந்த தன் குழந்தை யுடன் அவரை வந்து காண்கிறாள்.]

**பெண்:** ஐயா, எனக்கு இருந்தது இந்த ஒரு குழந்தைதான். திடீரென்று இது நேற்று இரவு இறந்துவிட்டது. ஒரு நோயும் இதற்கில்லை, ஐயா.

**புத்தர்:** நான் மிகவும் வருந்துகிறேன். துன்பத்தை ஆற்றிக்கொள். அழாதே!

**பெண்:** நான் எவ்வாறு ஆற்றிக் கொள் வேன்? எனக்கு உதவி யாரும் இல்லை. குழந்தை முகத்தைக் கண்டு ஆறுதல் பெறலாம் என்று இருந்தேனே! என்ன செய்வேன்?

**புத்தர்:** யார் என்ன செய்ய முடியும்? அவ ரவர் வினைப்பயனை அவரவரே நுகர வேண்டும். ஆண்டாண்டு புரண்டா லும் மாண்டார் வருவாரோ?

பெண் : தாங்களே இப்படிக் கூறினால் நான் என்ன செய்வேன்! இக்குழந்தையைப் பெற நான் எவ்வளவு நோன்பு நோற்




றேன்? நான் எத்தனை கோவில்களில் சென்று தவம் கிடந்தேன்? என் தலை விதி இப்படியா இருக்கும்?

புத்தர்: தாயே, வரும் துன்பம் வந்தே தீரும். அதைத் தடுக்க எவராலும் இய லாது. உன் துன்பம் மிகப் பெரியதே என்றாலும் என்ன செய்வது? பொறுத் துக்கொள். இறந்த குழந்தைக்குச் செய்ய வேண்டியதைச் செய். வீட்டுக் குப் போ.

பெண்: ஐயனே, தாங்கள் இப்படிச் சொல் லல் ஆகாது. தாங்கள் எங்கள் கடவுள் அல்லவா? என்னைக் காப்பாற்றுங்கள். என் குழந்தையை எழுப்பித் தாருங்கள். மாட்டீர்களானால் என் உயிரைத் தங் கள் கால் அடியிலேயே விடுகின்றேன். நான் குழந்தை இல்லாமல் வீடு திரும்ப மாட்டேன்.

புத்தர்: பெண்ணே, நான் கூறுவதைக் கவனமாய்க் கேள். நானா கடவுள்! நான் உன்னைப்போல ஒரு மனிதனே. கடவுளே ஆனாலும் இறந்தவர்களை எழுப்ப முடியாது. பிறப்பதும் சாவதும் உலக இயற்கை. இதைத் தடுப்பவர் எவரும் இல்லை. ஆகவே, வீணாக வருந் தாதே. போய்வா.

பெண்: நீங்கள் என்ன சொன்னாலும் நம்ப மாட்டேன். நீங்கள் என்பால் கருணை

கொள்ளவில்லை என்று தான் கூற வேண்டும். உங்களால் ஆகாத ஒன்று உண்டோ? என் பிள்ளையை எழுப்பித் தான் தரவேண்டும்.

**புத்தர் :** நல்லது. நீ மிகுந்த பிடிவாதக்காரி யாய் இருக்கிறாய். சரி, நான் சொல் வதைக் கேள். ஒரு பிடி கடுகு வாங்கி வா. அதை......

**பெண் :** அப்படிச் சொல்லுங்கள். ஒரு பிடி என்ன? ஒருபடி கொண்டு வருகிறேன்.

**புத்தர் :** அம்மா, நான் பேசி முடிப்பதற்குள் நீ பேசுகிறாயே! எனக்கு ஒரு பிடி கடுகு போதும். ஆனால்...

**பெண் :** ஆனால் என்ன?

**புத்தர் :** நீ கடுகு வாங்கும் வீட்டில் ஒரு வரும் இறந்திருக்கக்கூடாது. அப்படிப் பார்த்து வாங்கி வரவேண்டும் இல்லா விட்டால் உன் முயற்சி வீணாகும்.

**பெண் :** என் பிள்ளைக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன். எங்கு வேண்டுமானாலும் செல்வேன். இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன், ஐயா!

(பெண் போகிறாள்)

## காட்சி—2

**இடம் :** ஊர்

**காலம் :** முற்பகல்

**உறுப்பினர் :** குழந்தை இழந்த பெண், ஊர் வாசிகள்.

[அப் பெண் அருகிலுள்ள ஊரினுள் புகுந்து வீடு தோறும் கடுகு கேட்கிருள்.]

**பெண் :** அம்மா, ஒருபிடி கடுகு வேண்டும். இறந்த என் பிள்ளேயை எழுப்பித்தர ஒரு மந்திரவாதி வாங்கிவரச் சொன்ஞர் அம்மா.

**வீட்டுக்காரி :** ஐயோ பாவம்! இதோ தருகிறேன்.

**பெண் :** ஆனுல் உங்கள் வீட்டில் ஒருவரும் இறந்திருக்கக் கூடாது.

**வீட்டுக்காரி :** அதென்ன அம்மா! என் தாய் இறந்து ஒரு மாதங்கூட ஆகவில்லேயே!

**பெண் :** அப்படியாஞல் வேண்டாம். அடுத்த வீடு போகிறேன்.

(அடுத்த வீடு போகிருள்)

**பெண் :** அம்மா, ஒரு பிடி கடுகு வேண்டும். ஆனுல் உங்கள் வீட்டில் ஒருவரும் செத்திருக்கக் கூடாது.

மற்ளுெரு வீட்டுக்காரி : இதென்ன விந்தை! என் தகப்பன் இறந்து இரண்டு மாதங்கள் ஆயின. குற்றமில்லையென்ருல் தருகிறேன்.

பெண் : வேண்டாம் அம்மா.

(அடுத்த வீடு போகிருள்)

பெண் : அம்மா உங்கள் வீட்டில் யாரும் இறக்கவில்லையே!

இன்னெரு வீட்டுக்காரி : எங்கள் வீட்டில் தான் சாவு குடிபுகுந்திருக்கிறதே! இந்த ஓர் ஆண்டுக்குள் எத்தனை சாவுகள்! ஏன் என் வயிற்று எரிச்சலை எழுப்புகிருய்? போ.

(அடுத்த வீடு போகிருள்)

பெண் : அம்மா, உங்கள் வீட்டில் யாரும் இறவாதிருந்தால் ஒருபிடி கடுகு தாருங்கள். வீடுதோறும் ஏறி ஏறி என் கால்கள் தேய்ந்து போயின! சாகாத வீடே இந்த ஊரில் இல்லையா?

மற்ளுெரு வீட்டுக்காரி : நீஎன்ன இந்த உலகத்தவளே அல்லவா? உன் வீட்டில் உன் தகப்பன், தாய், மாமன், மாமி, அண்ணன், தம்பி ஒருவரும் சாகவில்லையா? சாவுதான் நம்மோடு பிறந்தது

ஆயிற்றே. சாவுக்கு மருந்துண்டோ ? அதை நீக்கத்தான் யாராலும் முடியுமா?

பெண் : அம்மா, உண்மையை அறிந்தேன். வருத்தப்படாதவர் ஒருவரும் இல்லை. நான் மட்டும் வருந்துவது ஏனே? நான் பகவானிடம் இந்தப் பிள்ளையுடன் போகேன். இதைக் கொண்டு போய்ப் புதைத்துவிடுகிறேன்.

(போகிருள்)

## காட்சி—3

இடம் : தோட்டம்

காலம் : மாலை

உறுப்பினர் : பெண், புத்தர்.

[அப்பெண் புத்த பகவானைக் காண்கிருள்.]

புத்தர் : தாயே, குழந்தை எங்கே? கடுகு கிடைத்ததா ?

பெண் : ஐயனே, அறிவு பெற்றேன். சாவு மக்களிக்கு இயல்பு. சாவில்லாத வீடே உலகில் இல்லை.

புத்தர் : பெண்ணே, நீ உண்மையில் அறிவு பெற்றய். உனக்கு நற்காலம் உண்டாவதாகுக.

பெண் : பகவானே, எனக்கு நல் உபதேசம் தரவேண்டும். துக்கமில்லாமல் வாழ வழி என்ன ?

புத்தர் : வழி எளிது. ஆனால் அதைக் கடைப்பிடிப்பதுதான் அரிது. நீ நல்ல எண்ணமும், நல்ல பேச்சும், நல்ல செயலும் உடையவளாய் இரு. ஒருவருக்கும் தீங்கு நினையாதே. எல்லா உயிர்களிடமும் அன்பாய் இரு. ஒன்றிலும் கெட்ட ஆசை கொள்ளாதே. உன் கடமையைச் செய். உனக்குத் துக்கம் உண்டாகாது.

பெண் : ஐயா, என்னால் முடிந்தவற்றைச் செய்வேன், போய் வருகிறேன்.

வணக்கம்.

(போகிறாள்)

| | | | |
|---|---|---|---|
| குழந்தை | ஆற்றிக்கொள் | ஏமாந்து | பகவான் |
| நுகர | பிடிவாதக்காரி | உபதேசம் | ஆறுதல் |
| நோன்பு | மந்திரவாதி | துக்கம் | காலடி |

பயிற்சி

I. விடை எழுது :

1. அவள் புத்தரை ஒரு தெய்வமாகக் கருதியது ஏன் ?

2. அதற்கு அவர் சொன்னதென்ன ?

3. கடுகு வாங்கிவர அவர் கூறிய கட்டுப்பாடு எது ?

II. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் தக்க வார்த்தைகளைச் சேர்த்து எழுது:-

1. தாங்கள்——சொல்லலாகாது.
2. இந்தக் குழந்தை——போயிற்று.
3. தாங்களே——தரவேண்டும்.
4. ஒன்றிலும்——கொள்ளாதே.
5. ஒருவருக்கும்——நினையாதே.

III. பின்வரும் கூட்டுச் சொற்களைப் பிரித்து எழுது:-
சாவில்லாதது, மற்றொன்று, ஒவ்வொருவர்.

IV. கட்டுரை

தாய் பகவானைப் பார்க்கும்போது எவ்வித நிலையில் இருந்தாள் என்பதையும், முடிவில் அவள் எவ்வாறு மாறினாள் என்பதையும், அதற்குக் காரணம் யாது என்பதையும் சுருக்கி எழுதுக.

# 15. சந்திரன்

மீன் இனம் ஓடி ஒளிக்குதம்மா !—ஊடே
வெள்ளிஓ டம்ஒன்று செல்லுதம்மா !
வானும் கடலாக மாறுதம்மா !—இந்த
மாட்சியில் உள்ளம் உருகுதம்மா ! (1)

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா !
—பின்னர்ச்
செம்பொன் குடம்போலத் தோன்று
தம்மா !
என்ன அதிசயம் பாராய் அம்மா !—ஈதுஓர்
இந்திர சாலமோ கூருய் அம்மா ! (2)

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா !—உடல்
வாட்டம் திருந்தி வருகுதம்மா !
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா !
—கண்ணில்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா ! (3)

பாலாழி மீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தாய் உருண்டு திரண்டதுவோ ?
மேலாய் உலகில் ஒளிசெயவே—ஈசன்
விண்ணகம் இட்ட விளக்கிதுவோ! (4)

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## குறிப்புரை

மீன் இனம் - நட்சத்திரக் கூட்டம், ஊடே - இடையே, வெள்ளி ஓடம் - சந்திரன், வான் - வானம், மாட்சி-பெருமை, உள்ளம்-மனம், உருகுது-கரைகிறது, சின்னஞ் சிறுவில்-பிறைச் சந்திரன், செம்பொன் - நல்ல பொன், ஈது-இது, இந்திர சாலம்-கண்கட்டு வித்தை, வாட்டம்-தேய்வு, பால் ஆழி-பாற்கடல், விண்ணகம்-வானமாகிய இடம்.

## பயிற்சி

I. விடை எழுது :

1. சந்திரனையும் நட்சத்திரங்களையும் புலவர் எவ்வாறு கற்பனை செய்கிறார் ?

2. 'இந்திரசாலமோ கூறாய்'—எதனை இந்திர சாலமெனக் கூறுகிறார் ?

3. பௌர்ணமி, அமாவாசை—இவற்றினைப் புலவர் எவ்வாறு கூறுகிறார் ?

4. 'ஈசன் விண்ணகம் இட்ட விளக்கு' என்று புலவர் எதனை எப்படிக் கூறுகிறார் ?

II. பிரித்து எழுது :—

ஒளிக்குதம்மா, உருகுதம்மா, கண்டதம்மா, பாலாழி, விண்ணகம், விளக்கிதுவோ.

III. வேற்றுமை காட்டு:—தோல்-தோள், கொல்-கொள், தாயை-தயை, மேன்மை-மென்மை.

IV இலக்கணம்

1. வேற்றுமை உருபுகள்-நாய், நாயை, (ஐ) நாயால்(ஆல்), நாய்க்கு(கு), நாயின்(இன்), நாயுடைய

(உடைய), நாயிடம் (இடம்), நாயே—இவை ஒவ்வொன்றுக்கும் உள்ள பொருள் வேற்றுமையைப் பார்.

ஐ, ஆல், கு, இன், உடைய, இடம்-இவை வேற்றுமை உருபுகள்.

நாய் என்பது எழுவாய் வேற்றுமை

நாயே என்பது விளி வேற்றுமை

2. 14-ம் பாடத்தின் முதல் இரண்டு பக்கங்களில் உள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுது.

## V. கட்டுரை

இந்தச் செய்யுளை உரை நடையாக எழுது.

# 16. ஆடை

'ஆடை இல்லாதவன் அரை மனிதன்' என்பது ஒரு பழமொழி. நாகரிகம் தோன்றியது முதல் மனிதன் ஆடை அணிந்து வருகிருன். குளிரிலிருந்தும் வெயிலிலிருந்தும் காப்பதற்குத் தாவரங்களுக்கும் பறவை விலங்கு முதலியவற்றிற்கும் இயற்கையிலே உதவிகள் அமைந்திருக்கின்றன. மனிதனுக்கோ அப்படியில்லை. ஆகவே அவன் வெப்ப தட்ப காலங்களில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மேற்போர்வை ஒன்றை நாடவேண்டியது ஆயிற்று.

முதலில் தழைகள், பட்டைகள், தோல்கள் முதலியன அவனுக்கு ஆடையாக உதவின. பட்டைகளை உரிப்பதிலிருந்து மெல்லிய நார்களின் பயனை அவன் அறிந்து கொண்டான். தோலின் பயனை அறிந்ததிலிருந்து அதன்மேல் உள்ள மயிரின் பயனையும் அவன் அறிந்திருக்கவேண்டும். கோரை முதலியவற்றை உரித்தும் அவன் ஆடை பின்னக் கற்றுக்கொண்டான். இவ்வாறு நாளடைவில் அவன் அறிவு வளர வளரப் பருத்தி பட்டு முதலியவற்றின் பயன் அவனுக்குத் தெரிந்தன.

இந்தியா மிகப் பழங்காலம் முதற் கொண்டு ஆடைக்குப் பெயர் பெற்றதாக இருந்தது. இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டு களுக்கு முன்னே இருந்த நகரங்கள் பல மண்ணுக்குள் புதைந்து போய்விட்டன. அவற்றுள் மொகஞ்சோ–தாரோ, ஹரப்பா என்ற இடங்களைத் தோண்டிப் பார்த்தார்



கைத்தறி

கள். அங்கே அக்காலத்து ஆடைகளிற் சில காணப்பட்டன. முன்னொரு பாடத்தில் எகிப்து நாட்டுப் பிரமிடுகளைப் பற்றிப் படித் தோம் அல்லவா? அவற்றுள் புதைக்கப் பட்ட பிணங்களின் உடல்களில் இந்திய ஆடைகள் சுற்றப்பட்டு இருந்தனவாம்.

பழங்காலத்துத் தமிழ் நூல்களிலிருந்து அக்காலத் தமிழருக்கு மிக மெல்லிய ஆடைகளை நெய்யத் தெரிந்திருந்தது என்பதை அறிகிறோம். பாலின் நுரைபோன்ற ஆடைகளையும் புகைபோன்ற மெல்லிய ஆடைகளையும் அவர்கள் அணிந்திருந்தார்கள் என்றும், அவற்றில் பூவேலை செய்யவும் கற்றிருந்தார்கள் என்றும் அந்நூல்களிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். பட்டு, பருத்தி, மயிர் இவற்றால் அவர்கள் ஆடைகள் நெய்ததோடு ஒருவகை எலி மயிராலும் ஆடை நெய்தார்கள் என்பது நமக்குத் தெரிகிறது.

நூல் நூற்றல் பெரும்பாலும் பெண்களாலேயே நடந்து வந்தது. பருத்தி முதலியவற்றால் நூற்கப்படுவதும் நூல்; கல்வியறிவு முதலியவற்றால் இயற்றப்படுவதும் நூல். இவ்வாறு நூல் என்ற சொல்லுக்கு இரு பொருள்கள் அமைந்திருக்கும் நேர்மையை நோக்கும்போது நூல் நூற்கும் தொழிலுக்கு நம் முன்னோர்கள் அளித்திருந்த சிறப்பு புலப்படும். இவ்வாறு நம்மவர் ஆடைகள் செய்து தாம் உடுத்திக் கொண்டதோடு உலகத்தின் பல பகுதிகளுக்கும் அவற்றை ஏற்றுமதி செய்துவந்தனர்.

ஆட்டு மயிரையே கண்டு பருத்திச் செடியே காணாத கிரேக்கர் இந்திய ஆடைகளை வாங்கி மகிழ்ந்தனர். அவர்களுடைய பழைய புத்தகம் ஒன்றிலே காணப்படும் ஒரு செய்தி, அக்காலத்தில் அவர்கள் இந்தியப் பருத்தியைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணத்தைக் காட்டுகிறது: "இந்தியாவிலே ஒருவிதக் கம்பளி மயிர் மரத்தில் காய்க்கிறது. அது ஆட்டு மயிரைவிட நுட்பமானது. பருத்தி ஓர் ஆட்டுக்குட்டி. அது சுற்றுப் புறங்களிலுள்ள செடிகளைத் தின்றுவிடும்" என்று எழுதி வைத்திருக்கின்றனர்.

பழங்காலத்தில் இங்கு இவ்வளவு மேன்மையுடன் விளங்கிய நெய்தல் தொழில் ஐரோப்பியர் இந்திய நாட்டை ஆளத் தொடங்கின வரையில் மிக மேன்மையான முறையில் வளர்ந்து வந்தது. மென்மையாக நெய்யப்பெற்ற ஆடைகளை ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வரையில் நம் நாட்டினர் பயன்படுத்தி வந்தனர். ஆங்கிலேயர் வந்தபின் அத்தொழில் நசுங்கி விட்டது. அதனோடு ஐரோப்பாவில் நீராவி கண்டுபிடிக்கப்பெற்று ஆலைத் தொழில்கள் தொடங்கின. பலபேர்கூடிப் பலநாள் செய்ய வேண்டிய தொழிலை ஓர் இயந்திரம் ஒரு

நொடியில் செய்தது. இந்தியர் மேலே நாட்டு ஆலைத் துணிகளோடு போட்டியிட முடியாமல் தம் தொழிலை இழந்தனர்.



நெசவு ஆலை – இராட்டினம்

பிறகு இந்திய முதலாளிகள் ஆலைகளை நம் நாட்டில் அமைத்தனர். இங்கும் ஆலைகளிலிருந்து துணிகள் வெளிவந்தன. இருந்தாலும் கைத்தொழிலுக்கு ஆதரவு இல்லாமலே போயிற்று. நூல் நூற்றுப் பிழைத்து வந்த பல கோடி இந்திய மக்கள் வேலை அற்றுப் போயினர்; அதனுல் வறுமையும் சோம்பலும் நாட்டில் குடிபுகுந்தன.

இக்கொடுமையை நீக்கக் காந்தி மகான் நூல் நூற்றலின் மேன்மையையும் கதராடை

யின் தூய்மையையும் இந்திய மக்களுக்குக் காட்டினுர். அவருடைய இச் செயலால் நாம் அடைந்த பெருமைகளைச் சொல்ல வியலாது. இன்று நூல் நூற்றல், ஆடை நெய்தல் ஆகிய தொழில்கள் சிறந்த குடிசைத் தொழில்களாக விளங்குகின்றன.

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | போர்வை | நுரை | சிறப்பு |
| நாகரிகம் | நாட | கோரை | நெய்தல் |
| ஏற்றுமதி | தாவரம் | நார் | பின்னல் |
| நேர்மை | கொடி | ஆடை | அணிந்து |
| நாளடைவில் | வேலையற்று | வெப்ப | தட்பம் |

பயிற்சி

I. விடை எழுது:

1. பல உயிர்ப் பிராணிகள் இயற்கையில் ஆடைகளைப் பெற்றுள்ளன. இஃது உண்மையா?

2. பழங்காலத்தில் இந்தியா நல்ல ஆடைக்குப் பெயர் பெற்றிருந்தது என்பது எவ்வாறு தெரியும்?

3. தமிழர் எத்தகைய ஆடைகள் நெய்யக் கற்றிருந்தனர்?

4. இந்தியப் பருத்தி பற்றிக் கிரேக்கர் கொண்ட கருத்து யாது?

5. நெய்தல் தொழில் பிற்காலத்தில் நசித்துப் போகக் காரணங்கள் யாவை?

6. மகாத்மா காந்தி ஆடைத் தொழிலுக்குச் செய்த நன்மை யாது?

II. ஆடை அணிந்தான் என்பது போலப் பின்வரும் பெயர்களுக்கு ஏற்ற வினைகளைக் கொடுக்க :-

உணவு—

வெற்றிலை—

கிரீடம்—

அணிகலம்—

சட்டை—

III. இலக்கணம்

நிறுத்தல் குறிகள் ; ? ! " "

பின்வரும் செய்தியில் உரிய இடங்களில் நிறுத்தல் குறிகளை இடுக :

ஒரு நாள் ஒருத்தி புத்தர் பெருமானை அணுகி ஐயா நான் அருமையாகப் பெற்ற குழந்தை இறந்து போயிற்று அதனை உயிர்ப்பித்துத் தரவேண்டும் என்று கேட்டாள் அதற்கு அவர் உலகத்திற் பிறந்தவர் யாவரும் சாகத்தான் வேண்டும் சாவாதவர் எவரும் இல்லை நீ வருந்திப் பயனில்லை போய் வா என்றார்.

IV. கட்டுரை

உன் ஊரில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு ரூபா மதிப்புள்ள ஆடைகள் செலவாகின்றன? அவை எங்கெங்கிருந்து வருகின்றன? கேட்டறிந்து ஒரு கட்டுரை எழுது.

# 17. கடிதங்கள்

1

ப. கணபதி,
அமைச்சர்,
தமிழ் இலக்கியக் கழகம்,

குமர குருபரர் நிலையம்,
ஸ்ரீவைகுண்டம்,
19—10'—'56.

புகைவண்டி நிலையத் தலைவர்கள் அவர்கள்,
திருநெல்வேலி சந்திப்பு,
திருநெல்வேலி.

ஐயா,

எங்கள் கழக உறுப்பினர் ஐம்பதின்மரும் எங்கள் ஆசிரியர் இருவரும் திருநெல்வேலி வண்டி நிலையத்திலிருந்து நிகழும் செப்டம்பர்மீ 6வே வியாழக்கிழமை சென்னைக்குச் செல்வதாக இருக்கிறோம். அன்று, திருநெல்வேலியிலிருந்து புறப்படும் சென்னை 'மெயில்' வண்டியில் எங்கள் ஐம்பத்திரண்டு பேருக்கும் இடம் ஒதுக்கி வைத்து உதவ வேண்டுகிறேன். அவ்வாறு செய்வதற்கு ஏற்றவாறு வழிச் சீட்டுப் பணம் இக்கடிதம் கொண்டு வருபவரிடம் கொடுத்திருக்கிறேன். அன்பு கூர்ந்து உதவுக.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்,
ப. கணபதி
அமைச்சர், தமிழ் இலக்கியக் கழகம்.

2

பெ. மாணிக்கம்,
திரு. பெரியசாமி மகன்.

50, மாசி வீதி,
மதுரை,
19—10—'56.

நெசவுத் தொழில் தலைமை ஆசிரியர்,
கைத்தொழிற் பள்ளிக்கூடம்,
மதுரை.

ஐயா,

தங்கள் பள்ளிக்கூடத்தில் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்குக் கட்டணமின்றித் தொழிற் கல்வி கற்றுக் கொடுப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன்.

நான் வழிவழியாக வரும் ஒரு நெசவுத் தொழிலாளியின் மகன் ; ஐந்தாவது வகுப்பு வரையில் படித்திருக்கிறேன். ஒழிந்த வேளைகளில் நான் என் தந்தைக்கு அவருடைய தறித் தொழிலில் உதவுவது உண்டு. நாங்கள் மிக்க வறியவர்கள். ஆகையால் பணம் செலவிட்டு என்னைப் படிக்க வைக்க என் தந்தையால் முடியவில்லை.

எனக்கு நல்ல உடல் வலிவும் கைத்திறனும் உண்டு என்பதைத் தங்களுக்குக் காட்ட இரு நற்சான்று இதழ்கள் இதனுடன் அனுப்பி உள்ளேன். தாங்கள் அன்புகூர்ந்து என்னைத் தங்கள் பள்ளிக்கூடத்தில் சம்பளம் இல்லாமல் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

தங்கள் பள்ளிக்கூட விதிகளுக்கு எக் காலத்திலும் உள்ளடங்கி நடப்பேனென்றும் என்னுல் முடிந்த வரையில் உழைத்து நற் பெயர் எடுக்க முயல்வேனென்றும் உறுதி கூறுகிறேன்.

அடக்கம்: இரண்டு நற்சான்று இதழ்கள்

இங்ஙனம்.
தங்கள் பணிவுள்ள,
பெ. மாணிக்கம்

இத்தகைய கடிதங்களில் நட்புக்கோ அன்புக்கோ இடமில்லை. ஆனுல் மரியாதை குறையலாகாது. இக்கடிதங்களில் சொல்ல வேண்டியவற்றைச் சுருக்கமாகவும், தெளி வாகவும் எழுத வேண்டும். எழுதுகிறவர் முகவரி, எழுதும் நாள் முதலியவற்றைத் தெளிவுபட எழுதவேண்டும்.

### பயிற்சி

பின்வரும் பொருள்களைக் கொண்டு கடிதங்கள் வரைக:

1. உன் கல்விச்சாலை ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கும்படி ஒரு பெரிய மனிதருக்கு.

2. ஒரு கடிகாரம் திருட்டுப் போனதாகப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு.

3. கேட்டபடி பொருள்களை அனுப்பவில்லை என்று கடைக்காரருக்கு.

## 18. கடிதம் செய்யும் பயணம்

நெடுந்தொலைவில் உள்ள நம் உறவினர்களுக்கோ, தோழர்களுக்கோ, அலுவல் அகங்களுக்கோ நாம் கடிதங்கள் எழுதுகிறோம். அவை தவறாமல், தாமதம் இல்லாமல் உடனுக்குடன் போய்ச் சேர்ந்து விடுகின்றன. இது எப்படி முடிகிறது ?

அஞ்சல் பெட்டியில் போடும் ஒரு கடிதம் நூற்றுக் கணக்கான மைல் தொலைவை விரைவில் கடந்து தவறாமல் குறித்தவரிடம் வந்து சேருவது விந்தை அல்லவா ?

சில சமயங்கள் நாம் கடிதங்கள் எழுதினால் போய்ச் சேருவதில்லை. தோழர்கள் எழுதும் கடிதங்கள் நம்மிடம் வந்து சேருவதில்லை. முகவரியை நாம் சரியான முறையில் எழுதாமையே இதற்குக் காரணம் ஆகும். முகவரி சரியாக எழுதினால் கடிதங்கள் தவறமாட்டா.

முகவரியைப் பார்த்தே அஞ்சல் நிலையத்தார் கடிதங்களைப் பிரித்து அனுப்புகின்றனர். முகவரியில் முழுப் பெயரையும் தெளிவாக எழுதவேண்டும். ஒரே பெயருடையவர்கள் ஒரே வட்டாரத்தில் பலர் இருத்தல் கூடுமாதலின், பெயரை, தந்தை பெயர்

அல்லது குடும்பப் பெயர் முதலிய முன் எழுத்துக்களுடன் ஐயத்திற்கு இடமில்லாமல் சரியாக எழுதவேண்டும். பிறகு, பெயரின் கீழ் அடுத்த வரியில் அவர் செய்யும் வேலை குறிக்கப்படுதல் வேண்டும்.

அஞ்சல் நிலையத்தில் நாள்தோறும் நூருயிரக் கணக்கான கடிதங்கள் குவிகின்றன. அவை சிற்றூர் முதல் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பேரூர்கள் வரை முகவரி இடப்பட்டு வருகின்றன. ஊர்களில் கூடச் சில ஒரே பெயர் உடையனவாக இருக்கின்றன. எனவே, ஊரின் பெயரை எழுதிய பின் அதன் அடுத்த வரியில் மாவட்டத்தின் பெயரை எழுதியாக வேண்டும். பட்டிகள், கிராமங்கள், சிற்றூர்கள் போன்றவைகளில், மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் பெருந் தேவை ஆகும்.

தெருக்களில் வைக்கப்பட்டுள்ள செந்நிற அஞ்சல் பெட்டிகளில் போடப்படும் கடிதங்களை அஞ்சல்காரர் கொண்டுவந்து நிலையத்தில் சேர்க்கின்றனர். இவ்வாறு பல பெட்டிகளிலிருந்து கொண்டு வரப்படும் கடிதங்கள் ஒரு பெரும் மலைபோல் அஞ்சல் நிலையத்தில் குவிந்து விடுகின்றன. இவற்றுள் தென் இந்தியாவிலுள்ள நகரங்கள்

TB 631(5) N57



தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் 89389 சென்னை 600 008

கிராமங்கள் முதலியவற்றிற்கும் வட இந்தியாவிலுள்ள நகரங்கள் கிராமங்கள் முதலியவற்றிற்கும் செல்ல வேண்டிய கடிதங்கள் சேர்ந்து கிடக்கின்றன.

இவற்றைத் தனித்தனி இனம் பிரிக்கும் வேலையைச் செய்பவர்கள், 'இனம் பிரிப்பவர்' அல்லது இனம் பிரிக்கும் ஊழியர் எனக் கூறப்படுகின்றனர். இவ்வாறு தனித் தனிப் பிரிக்கும் வேலையைச் செய்யும் அஞ்சல் நிலையம் 'இனம் பிரிக்கும்' நிலையம் என வழங்கப்படுகிறது.

கடிதங்கள் எந்தத் திசை நோக்கிச் செல்ல வேண்டுமோ அதற்கேற்றவாறு முதலில் திசைகளுக்குரிய தனித்தனிக் கட்டுகளாகப் பிரிக்கப்படும். ஒரே திசை நோக்கிச் செல்லும் கடிதங்கள் அனைத்தும் ஒரு பையில் இடப்பட்டுப் புகை வண்டியில் இருந்த வண்ணம் கடிதங்களை இனம் பிரித்துச் செல்லும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். மெயில் வண்டிகளில் செந்நிற அஞ்சல் வண்டி ஒன்று தனியே இணைக்கப்பட்டு இருப்பதை நீங்கள் கண்டு இருப்பீர்கள். அவ்வண்டிக்குள் கடிதங்களை இனம் பிரிப்பவர் பலர் வேலை செய்வார்கள். அதில் அறை அறையாக இருக்கும் இடங்களில் கடிதங்களைப் பிரித்துப் போடு

வார்கள். இது ஓடிக்கொண்டிருக்கும் அஞ்சல் நிலையம் ஆகும். இங்குத்தான் கடிதங்களைப் பேரூர்கள், சிற்றூர்கள், நகரங்கள், வட்டாரங்கள் என வகைப்படுத்தி இனம் பிரித்துத் தனித்தனிப் பைகளில் கட்டுகின்றனர்.

புகை வண்டி முழு வேகத்தில் சென்று கொண்டிருக்கும்போது சிறு விளக்குகளின் ஒளியில் கடிதங்கள் மீதுள்ள முகவரிகளைக் கூர்ந்து வாசித்துப் பிரிப்பது இயலாத செயல். அதிலும் முகவரிகளைப் பென்சில் கொண்டு எழுதுவதோ, நிறம் மங்கிய மையில் எழுதுவதோ படிப்பதற்குத் தொல்லை அளிப்பது ஆகும்.

புகைவண்டி விரைந்து செல்வதால் ஆங்காங்கே சேரவேண்டிய தபால் பைகளைக் கொடுத்துவிட வேண்டியிருப்பதால், இனம் பிரிப்பவர்கள் முகவரி முழுவதையும் படித்துக்கொண்டிருக்க முடியாது; அஞ்சல் நிலைய ஊர் அம்முகவரியில் எது என்பதைப் பார்த்துக் கொண்டு, அதை அந்த ஊருக்குரிய அறையில் போட்டு விடுவார்கள்; பிறகு அவ்வறையில் உள்ள கடிதங்களை எடுத்து மூட்டையில் இட்டுக் கட்டி அந்த ஊருக்குரிய புகைவண்டி நிலையத்தில் கொடுத்து விடுவார்கள்; எனவே முகவரி

தெளிவாக எழுதப்படாவிட்டால், கடிதம், இனம் பிரிக்கப்படாமல் வைக்கப்பட்டு விடும்; அல்லது தவருன இடத்திற்கு அனுப்பப்படும். எனவே கடிதம் தவறிப் போகாமலும் விரைவில் வந்து சேரவும் வேண்டுமாஞல், முகவரியைச் சரியானபடி நல்ல மையில் எழுதவேண்டும். பெயர், (முன் எழுத்துக்களுடன்) பதவி, வீட்டு இலக்கம், தெருப் பெயர், ஊரின் பெயர், அஞ்சல் நிலையமுள்ள ஊர், மாவட்டம் முதலிய விவரங்களை விடாமல் எழுதவேண்டும். மாதிரிக்கு இங்கு முகவரி தரப்படுகிறது பாருங்கள்:—

பு. சே. மணிமேகலை
தமிழ்ப் பேராசிரியர்,
8, மறைமலையடிகள் தெரு,
கிண்டி, சைதாப்பேட்டை அஞ்சல்,
சென்னை.

எவருக்கு நாம் கடிதம் எழுதினேமோ, அவர் அவ்வூரில் இல்லாவிட்டால், அங்குள்ளவர்கள் அந்த முகவரியை அடித்து விட்டு, அவருடைய புதிய முகவரியைத் தெளிவாக அங்கேயே எழுதி அஞ்சல் பெட்டியில் போட்டுவிட்டால், கடிதம் அவரிடம் போய்ச் சேர்ந்துவிடும்.

கடிதத்தின்மீது சரியானபடி அஞ்சல் தலை ஒட்ட மறத்தல் கூடாது. அஞ்சல் தலை ஒட்டாவிட்டால் இருமடங்குக் கட்டணம் முகவரியாளரிடம் வாங்கப்படும். குறைந்த அளவு அஞ்சல் தலை ஒட்டினலும், முகவரியாளரிடம் கட்டணம் வாங்கப்படும். மேலும் இதனல் கடிதங்கள் தாமதமாகப் போய்ச் சேரும்.

உங்கள் கடிதம் தாமதம் இல்லாமலும் தவறிப்போகாமலும் உரிய காலத்தில் போய்ச் சேரவேண்டுமானல், பின் வரும் விதிகளை நினைவில் வைக்கவும்:

1. தக்க அளவு அஞ்சல் தலைகளை ஒட்ட மறக்கக்கூடாது. குறைந்த அளவு தலைகளை ஒட்டுதலும் தவறு. தலைகள் ஒட்டாமலே அனுப்புதலும் சரியன்று.

2. பென்சில், நிறம் மங்கிய மை முதலியவற்ருல் முகவரியை எழுதாதே.

3. நல்ல மையினல், நிதானமாகவும், தெளிவாகவும், முழு விவரங்களுடனும் அழகாக முகவரியை எழுதவேண்டும்.

4. முகவரி எழுதுகையில், முதலில் பெயரையும் அதன் கீழ் வரியில் அவர் செய்யும் வேலையையும், அதன்கீழ் வரியில் வீட்டு இலக்கமும். தெருப்பெயரும், அதன் கீழ் வரியில் அஞ்சல் நிலைய ஊரின் பெயரும், அதன்கீழ் வரியில் மாவட்டம், இராச்சியம் முதலியவற்றின் பெயர்களும் எழுதப்படவேண்டும்.

5. முகவரியில் அஞ்சல் நிலைய ஊரின் பெயரைக் கொட்டை எழுத்துக்களில் தெளிவாக எழுதி அடிக்கோடு இடவேண்டும். இதனைக் கருத்தில் ஊன்றிப் பதிய வைக்க வேண்டும்.

6. முகவரியில் வரிக்கு வரி இடம் விடவேண்டும். ஒருவேளை, முகவரிக்கு உரியவர் அங்கு இல்லாமல் வேறு இடம் சென்று இருந்தால், அங்குள்ளவர்கள் இந்த முகவரியை அடித்துவிட்டுப் புதிய முகவரி எழுத வசதி இருத்தல் வேண்டும்.

7. கடிதத்தை அஞ்சல் பெட்டியில் போடுமுன், அஞ்சல் தலைகள் சரியான அளவு ஒட்டப்பட்டு இருக்கின்றனவா? உறை நல்ல முறையில் மூடி ஒட்டப்பட்டு இருக்கிறதா? முகவரி ஒழுங்கான முறையில் எழுதப்பட்டு இருக்கிறதா? என்று மற்றும் ஒரு முறை கவனித்துக்கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| உறவினர் | முறையீடு | பேரூர் |
| தோழர் | தவறுதல் | கட்டணம் |
| அலுவல் அகம் | இராச்சியம் | பட்டிகள் |
| பத்திரிகை | வட்டாரம் | கிராமங்கள் |
| நெடுந்தொலை | குவிகின்றன | இனம் பிரித்தல் |
| விந்தை | சிற்றூர் | அடிக்கோடு |

## பயிற்சி

I. விடை எழுது :

1. கடிதம் தவறிவிடுவதற்கோ தாமதிப்பதற்கோ காரணம் நாம் என்பது ஏன் ?

2. பெயருக்குக் கீழ், செய்யும் வேலையைக் குறிக்க வேண்டுவது ஏன் ?

3. முகவரியைச் சரியான முறையில் எழுதுவது எப்படி ?

4. கடிதங்கள் இனம் பிரிக்கும் நிலையத்தில் எவ் வகையில் பிரிக்கப்படுகிறது ?

5. கடிதங்கள் அவ்வப் பகுதிகளுக்கெனப் பிரிக் படுவது எங்கே ?

6. முகவரியைச் சரியான முறையில் எழுதவேண் டும் என்பது ஏன் ?

7. முகவரியை நல்ல மையில் எழுதவேண்டும் எனப்படுவதேன் ?

8. 'இனம் பிரித்தல்' என்பது யாது ?

9. புகைவண்டியிலுள்ள அஞ்சல் நிலையத்தின் வேலைகள் யாவை ?

10. அஞ்சல் தலை ஒட்டாமல் கடிதங்கள் அனுப் புதல் நல்லதல்ல எனப்படுவதேன் ?

11. நீங்கள் நினைவில் வைக்கவேண்டிய விதிகள் யாவை ?

12. கடிதத்தை அஞ்சல் பெட்டியில் போடுமுன் என்ன செய்யவேண்டும் ?

1. கிராமத்தில் இருக்கும் உன் பாட்டியின் முக வரியை எழுது.

2. கடிதம் எப்படிப் பயணம் செய்கிறதென்ப தைச் சிறு கதைபோல் கூறு.

3. எவ்வெக் கடிதத்திற்கு எவ்வளவு எவ்வளவு அஞ்சல் தலை ஒட்டவேண்டும் என்பதைக் குறித்துவை.

---



## 19. தமிழ் முழக்கம்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில்யாங்கணுமேபிறந்ததில்லைஉண்மை
வெறும் புகழ்ச்சி இல்லை.
ஊமையராய்ச்செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொல் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

# 20. செய்யுட் பகுதி

## 1. கடவுள் வாழ்த்து

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே. (அப்பர்)

### குறிப்புரை

அப்பரின் மற்றொரு பெயர் திருநாவுக்கரசர். இவர் திருவாமூரில் பிறந்தவர். பெற்றோர்-புகழனார் மாதினியார். இவர் சமணராயிருந்து தம் தமக்கை திலகவதியால் மீண்டும் சைவரானார். பிறகு இறைவன்மீது பல பாட்டுகள் பாடிச் சைவநெறி பரப்பினார். இவை தேவாரம் எனப்படும். இவர் பாடிய தேவாரங்களுள் ஒன்றே மேலேயுள்ள கடவுள் வாழ்த்து. இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

வாழ்த்த – துதிக்க. மடநெஞ்சு – இளமை பொருந்திய நெஞ்சம். தாழ்த்த-வணங்க. சென்னி-தலை. சூழ்த்த - கொத்தாகவுள்ள. வீழ்த்தவா – வீணாக்கினேனே. வினையேன்-தீவினைகள் சூழ்ந்துள்ள வணுகிய நான்.

## 2. தமிழ் வாழ்த்து

வாழிய செந்தமிழ் வாழ்க நறறமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மைவந் தெய்துக தீதெல்லாம் நலிக
அறம்வளர்ந் திடுக மறமடி வுறுக,

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

### குறிப்புரை

இதனை இயற்றியவர் சி. சுப்பிரமணிய பாரதியார். இவர் மக்கள் மனத்தில் நாட்டு உரிமைப் பற்றை உண்டாக்கக்கூடிய உணர்ச்சி மிகுந்த பாடல்கள் பாடியவர். 1882-இல் எட்டையபுரத்தில் பிறந்தவர். 11-9-1921-இல் இவ்வுலகைத் துறந்தார். பெற்றோர்: சின்னசாமி ஐயர். இலக்குமி.

நற்றமிழர்-நல்ல தமிழர், இன்னல்கள்-துன்பங்கள். மாய்க-அழியுமாக. எய்துக-அடையுமாக. தீது எல்லாம்-தீயவைகள் எல்லாம். நலிக-நீங்குமாக. மறம்-கொடுமை. மடிவுறுக-இறந்து ஒழியுமாக.

## 3. மூதுரை

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான் தருத லால். 1

நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 2

பண்டு முளைப்ப(து) அரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். 3

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம். 4

அடக்கம் உடையார் அறிவிலர்என்(று)எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. 5

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. 6

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்(று)
அல்லாதார் கெட்டால்அங்(கு) என்னாவர்—சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால். 7

## குறிப்புரை

இந்நூலை எழுதியவர் ஔவையார் ஆவர். இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி முதலிய நீதி நூல்களை இயற்றியவர். இவர் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர் என்பர். சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் இவராகார். எனவே, இவர் இரண்டாவது ஔவை என்பர் ஆராய்ச்சியாளர்.

1. நன்றி - உதவி. செய்தக்கால் - செய்தவிடத்து. என்று தருங்கொல்-எப்போது செய்வாரோ. தளரா வளர்தெங்கு-தளராமல் வளர்கின்ற தென்னை மரமானது. தாள் உண்ட-தன் அடிவேர்களினால் உண்ட.

2. பொசியும்-கசிந்து செல்லும். தொல் உலகில்-பழமையான இவ்வுலகில். உளரேல்-இருப்பாரானால்.

3. பண்டு-முன்னதாக. உமிவிண்டுபோனால்-உமி நீங்கிப் போனால். கொண்ட-அடைந்த. பேராற்றல்-மிகுந்த வலிமை. அளவு இன்றி-துணை வலி இல்லாமல். ஏற்ற-மேற்கொண்ட.

4. கவையாகி-கிளைகள் தழைத்து. கொம்பாகி-கொம்புகள் உடையனவாகி, காட்டகத்தே-காட்டில் (உள்ள). நீட்டோலை-கொடுத்த ஓலைச் சுவடியை. வாசியா நின்றான்-படிக்காமல் நின்றவனும். குறிப்பறியமாட்டாதவன் - பிறர் குறிப்பை உணரமாட்டாதவனும். நன்மரம்-நல்ல மரங்களாவர்.

5. கடக்க - வெல்லுவதற்கு. மடத்தலை-நீர் ஓடும் மடைவாயில். உறுமீன்-பெரிய மீன்.

6. அற்ற குளத்தில்-நீர் வற்றிப்போன குளத்திலிருந்து. அறு-நீங்கிச் செல்கின்ற. உற்றுழி-வறுமை வந்தபோது. தீர்வார்-நீங்காமல் உடனிருந்து துன்பம் அடைபவரே. உறவு-மிகுந்த உறவினராவர்.

7. சீரியர்-மேலோர். சீரியர் (மற்று) அல்லாதார்-கீழோர். மற்று அசை. சீரிய பொன்னின் குடம்-சிறந்த பொன்னால் செய்த குடம். உடைந்தக்கால்-உடைந்தால்.

## 4. நல்வழி

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்குஎன்னென்(று) இட்டுண்(டு) இரும். 1

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையத்துள்
அற்புதமாம் என்றே அறி. 2

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவம் என்ன அறிந்தன்(று) இடர்க்கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். 3

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பார்ஆண்டும் பாட்(டு)இசைத்தும்— போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 4

மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம்தவம் முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். 5

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந்(து) எண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் களம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். 6

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாரும்அங் கில்லை—சுரந்தமும்
கற்றா தரல்போல் கரவா(து) அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 7

—ஔவையார்

## குறிப்புரை

இதன் ஆசிரியராகிய ஔவையாரைப்பற்றி முன்னரே படித்திருக்கிறீர்கள்.

1. ஆண்டாண்டுதோறும் - பல ஆண்டுகளாக. மாண்டார்-இறந்தவர். மாநிலத்தீர்-உலக மக்களே. அது வழியே-அவர்கள் சென்ற வழியாகிய மரணவழியில். போமளவும்-இறக்கும் வரை. என் என்று-உலகுடன் என்ன தொடர்பு என்று. இட்டு உண்டு இரும்-பிறர்க்குக் கொடுத்தும் வயிருர உண்டும் இருப்பீர்களாக.

2. நிலநலத்தால் - நிலத்தின் நன்மையால். தக்கோர்-தகுதி உடையவர். கொடையால்-ஈகைத் தன்மையால். கண் நீர்மை-கண்களின் தன்மை. கற்பழியாவாற்ருல்-கற்பு நிலே தவருத வழியினுல். வையத்துள்-உலகில்.

3. செய்தீவினே-முன்செய்த தீவினே. எய்த வருமோ-பெறக்கிடைக்குமோ. இருநிதியம்-பெரிய செல்வம். அறும்பாவம் என்ன - பாவம் ஒழியும் என்று. அன்று இடார்க்கு-முன்னர்க் கொடை அளிக்காதவர்க்கு.

4. சேவித்தும்-பிறரிடம் பணிந்து ஊழியம் செய்தும். இரந்தும்-ஐயம் கேட்டும். தெண்ணீர்க் கடல்-தெளிந்த நீரையுடைய கடல். பாவித்தும்-சிறியோரைப் பெரியோராக மதித்தும். போவிப்பம்-கழிக்கின்ருேம். நாழி-ஒரு படி.

5. வண்மை-கொடை. தவம்-மனமடக்கத்தால் ஏற்படும் ஆற்றல். உயர்ச்சி-உயர்வு. தேனின் கசிவந்த-தேன்போல் இனிய சொற்களேயுடைய. சொல்லியர்-மாதர். காமுறுதல்-விருப்பமடைதல்.

6. நினேந்தொண்ணுவன - நினேக்கும் நினேப்புகளோ. மண்ணின் கலம்போல-மட்பாண்டம்போல. சாந்துணேயும்-இறக்கும் வரையில்.

7. இரந்து அழைப்பார்-கெஞ்சி அழைப்பார். கற்ரு-கன்று+ஆ-கன்றையுடைய பசு. அமுதம்-பாலே. சுரந்துதரல் போல-சுரந்து கொடுப்பது போல. கரவாது-ஒளிக்காமல். உற்ருர்-உறவினர்.

## 5. நன்னெறி

நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மை நிலேபோம். 1

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளே நீக்கக் கருதாது உலகில்
நிறையிருளே நீக்குமேல் நின்று 2

பொய்ப்புலன்கள் ஐந்தும்நோய் புல்லியர்பால் அன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளேயாவாம்—துப்பின்
சுழற்றுங்கொல் கற்றூணச சூரு வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு 3

இல்லானுக்(கு)அன்பிங்(கு)இடம்பொருள்ஏவல்மற்(று)
எல்லாம் இருந்தும் அவற்(கு) என்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க்(கு) ஏது முதுநூல் தெரியும்
விழியிலார்க்(கு) ஏது விளக்கு 4

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்(து)
அதிர்வளேயாய் பொங்காது அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். 5

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண், 6

உடற்கு வரும்இடர்நெஞ் சோங்குபரத்(து) உற்ரேர்
அடுக்கும் ஒருகோடி யாக—நடுக்கமுருர்
பண்ணில் புகலும் பனிமொழியாய் அஞ்சுமோ
மண்ணில் புலியைமதி மான். 7

## குறிப்புரை

காஞ்சீபுரம் குமாரசாமி தேசிகரின் மூத்த புதல்வராகிய சிவப்பிரகாச சுவாமிகள் இந்நூலின் ஆசிரியராவர். இவர் துறைமங்கலத்தில் வாழ்ந் தமையால் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என வழங்கப்படுகிறார். இவரைக் கற்பனைக் களஞ்சியம் என்று புலவர் உலகம் போற்றும். இவர் இயற்றிய நூல்கள் பல ஆகும். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டு. நல்ல நெறிகளைப் புகட்டக் கூடியதாக நாற்பது பாடல்களைக் கொண்டது இந்நூல்.

1. நீக்கம் அறும் இருவர்-நீங்குதல் இல்லாத நண்பர் இருவர். நீங்கி-பிரிந்து. புணர்ந்தாலும்-கூடினாலும். நொய்தாகும்-அற்பமாகக் கருதப் படும். புல்லினும்-சேர்ந்தாலும். திண்மை நிலை-(முளைப்பதற்குரிய) வலிய நிலை.

2. தங்குறை தீர்வு உள்ளார்-தமக்குள்ள குறைகளைப் போக்க நினையாமல். தளர்ந்து பிறர்க்கு உறூஉம்-மனம் இரங்கிப் பிறருக்கு வரு கின்ற. வெங்குறை தீர்க்கிற்பார்-வெம்மையாகிய குறையை நீக்குவார். விழுமியோர்-பெரியோர். திங்கள்-சந்திரன். கறையிருளை-தன்னிடமுள்ள களங்கமாகிய இருளை. மேல் நின்று-வானத்தில் நின்று. நிறையிருளை-நிறைந்துள்ள இருளை.

3. பொய்ப்புலன்கள் ஐந்தும்-பொய்யாகிய புலன்கள் ஐந்தும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்). புல்லியர்-அற்ப அறிவுடையோர், நோய்-துன்பம், துப்பின்-வலிமையால், சுழற்றுங்கொல்-சுழலச் செய்யுமோ. சூறாவளி-சுழல்காற்று. புன் துரும்பு-அற்பமான துரும்பு.

4. இங்கு அன்பு இல்லானுக்கு - இந்த உல கில் அன்பு இல்லாதவனுக்கு. அவற்கு என் செய் யும்-அவனுக்கு என்ன பயனைச் செய்யும். மொழி இலார்க்கு-ஊமைகளுக்கு. முதுநூல் ஏது-பழமை

யான நூல்கள் என்ன பயன் தரும்? தெரியும் விழி இலார்க்கு-பார்க்கின்ற கண் இலாக் குருடர்க்கு.

5. இருநீர் வியனுலகம்-பெரிய கடல் சூழ்ந்த உலகில் உள்ள மக்கள். இன்சொல்-நயமான சொற்கள். வன்சொல் - கடினமான சொற்கள். பொன் செய்து அதிர்வளையாய் - பொன்னால் செய்து ஒலிக்கின்ற வளையல் அணிந்த பெண்ணே. கடல் தண் என் கதிர்வரவால்-கடல் குளிர்ந்த கதிர்களையுடைய சந்திரன் வருகையால். அழற் கதிரால்-சூரியனின் வெப்ப மிகுந்த கதிர்களால்.

6. உள்ளம் எரியின் இழுதாவர் என்க-மனம் நெருப்பிலிட்ட மெழுகுபோல உருகுவர் என்பதை அறிவாயாக. தெரியிழாய்-நல்ல அணிகலன்களை அணிந்த பெண்ணே. மண்டு பிணியால்-மிகுந்த நோயினால். கலுழும்-துன்பம் அடையும்.

7. நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் - தம் மனத்தை உயர்ந்த பரம்பொருளிடம் நிறுத்திய சான்றோர். உடற்கு வரும் இவர்-உடலுக்கு வரும் துன்பம். ஆக-உள்ளதாக. பண்ணிற் புகலும்-இசை போல் இனிமையாய்ப் பேசுகின்ற. பனி-குளிர்ந்த. மண்ணில் புலியை-இவ்வுலகில் உள்ள புலியை. மதிமான் - சந்திரனில் உள்ள மான் (களங்கம்).

## 6. பல்சுவைப் பாக்கள்

### (1) நாலு கோடி கவி

மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீர் உண்ணீர் என்றே ஊட்டாதார் தன்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக
கோடாமை கோடி பெறும். —ஔவையார்

TB
031(5)
N67



குறிப்புரை

மதியாதார்–தம்மை மதிக்காதவர். முற்றம்–வீட்டு முன்புறம். ஊட்டாதார்–உண்ணவைக்காதவர். கோடாமை–மாருமை (பொய் பேசாமை).

## (2) துயரம் ஒன்றே

பாலுக்குச் சர்க்கரை இல்லையென் பார்க்கும் பருக்கை அற்ற
கூழுக்குப் போட உப்பில்லைஎன் பார்க்குமுள் குத்தித் தைத்த
காலுக்குத் தோல்செருப்பு இல்லைஎன் பார்க்கும் கனக தண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லையென் பார்க்கும் விசனம் ஒன்றே.

—ஔவையார்

குறிப்புரை

பருக்கை – சோற்றுப்பருக்கை. கனகதண்டி–பொன் பல்லக்கு. பஞ்சணை – இலவம் பஞ்சு மெத்தை. விசனம்–துன்பம்.

## (3) ஒன்றைவிட ஒன்று பெரியது

எழுதரிது : முன்னம் எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய்
கற்பரிது : நற்பயனைக் காண்பரிது ; கண்டக்கால்
நிற்பரிது தான் அந் நிலை. —ஔவையார்

குறிப்புரை

முன்னம்–முதலில். எழுதரிது–எழுதுவது அருமையானது. பழுது அற–குற்றம் இல்லாமல். பண்பாய்–முறையாக. காண்பது – ஆராய்ந்து அறிவது.

## (4) பிறவிக் குணம்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். —ஔவையார்

குறிப்புரை

சித்திரம் – ஓவியம். நித்தம் – நாள்தோறும். தயை – இரக்கம். கொடை – இல்லாதவருக்குக் கொடுக்கும் தன்மை. பிறவிக் குணம்–பிறப்பினுல் அமையும் குணம்.

ஆவணக்காப்பக ... சென்னை-600 003.
84389

12
1/1/57
R32
8.71

Approved by the Text Book Committee Madras, Vide Fort St. George Gazettee Part I-B page 3, dated 7th May 1957.


# எமது சொந்த வெளியீடுகள்

## நீதி நூற்கள்

| | |
|---|---|
| உலகநீதி | மூலமும் உரையும் |
| ஆத்திசூடி | ,, |
| கொன்றைவேந்தன் | ,, |
| வாக்குண்டாம் | ,, |
| வெற்றிவேற்கை | ,, |
| நல்வழி | ,, |
| நன்னெறி | ,, |

## பாட புத்தகங்கள்

| | |
|---|---|
| கமல வாசகம் | 1 முதல் 5 வகுப்புகள் |
| கமல பூகோளம் | 3, 4, 5 வகுப்புகள் |

விவேகானந்தா எண்சுவடி வாய்ப்பாடு
இமயம் கண்ட இரு பெரு வேந்தர்
நித்திலக் கோவை.

●

**விவேகானந்தா புத்தகசாலை**
50, பத்து ரோட்,
தபால் பெட்டி எண் 296.
கோலாலம்பூர்.